விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 08 வெள்ளிக்கிழமை (21.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093




# நோர்வேக் குழு வன்னிக்கு செல்வதால் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இணைத்தலைமை நாடுகள் மற்றும் நோர்வேப் பிரதிநிதிகள் வன்னி செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும் எனும் ஐரோப்பிய ஒன்றிய உயர் மட்டக் குழுவினரின் கோரிக்கையானது சமாதான முயற்சிகளில் எந்தவித முன்னேற்றத்தையும் தரப்போவதில்லை எனவும் சர்வதேச உயர் மட்டக் குழுவினர் கிளிநொச்சி செல்வதற்கான பாதுகாப்பை அளிப்பது குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடியுடன் கூடிய கடும் மழை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடியுடன் கூடிய கடும் மழை பெய்தது. நேற்றுப் பிற்பகல்3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரையான 3 மணித்தியாலங்களில் 40.3 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக யாழ்.மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி வி.புஷ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இடியுடன் கூடிய கடும் மழை பெய்யும் போது மின்னல் தாக்கும்அபாயம் உள்ளதால் வெளியிடங்களில் நிற்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் மின் உபகரணங்களின் பாவனையை நிறுத்தி வைக்குமாறும் மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை முகாம்களில் வாழும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க நாடளாவிய ரீதியில் சீரற்ற காலநிலை நிலவி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம் முன்னாள் மேஜர் ஜெனரலிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரியாக இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரல் சுனில் சில்வா நேற்றுக்காலை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் சிறப்பு உத்தரவின் பேரிலேயே அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக ரூபவாஹினி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் புதிதாக மேலதிக உதவி பணிப்பாளர் நாயகம் என்ற பதவியை உருவாக்கி அந்தப் பதவிக்கு மேஜர் ஜெனரல் சுனில் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தை கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து 2008 ஜனவரி 18ஆம் திகதி ஓய்வுபெற்ற அவர் இராணுவத்தில் இருந்தபோது இராணுவ தலைமையகத்தில் முக்கிய பதவி (10ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சியினை தக்கவைக்க ஆயுதக்குழுக்களின் உதவி

### அரசைச் சாடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

அரசாங்கம் ஆட்சியினைத் தொடர்வதற்காக ஆயுதக் குழுவின் உதவியினை நாடுகின்றது.

ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குவோம் என்று ஜெனீவாவில் உறுதியளித்த அரசாங்கம் இன்று ஆயுதக்குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்ட கிழக்குப் பிரதேசத்தை அரசாங்கம் மற்றுமொரு ஆயுதக்குழுவிடம் ஒப்படைத்துள்ளது. ஆயுதக்குழுவிடமிருந்து கிழக்கை நாம் மீண்டும் மீட்கவேண்டும் என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு (10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைப்பு

### அதிரடிப்படை அங்கிருந்து வெளியேற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பு பொறுப்பு படைத்தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் இருந்து அதிரடிப்படையினரை உடனடியாக மீளத் திரும்புமாறு உத்தரவிட்டிருக்கும் பாதுகாப்பு அமைச்சு அதிரடிப் படைத் தலைமையில் திடீர் மாற்றத்தையும் நேற்று மேற்கொண்டுள்ளது.

கிழக்கில் படை நடவடிக்கையைத் தொடர்ந்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறையின் பாதுகாப்பு அதிரடிப் படையினரிடமே இதுவரை காலமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் அதிரடிப்படையினரை உடனடியாக விலகுமாறும் அதிரடிப்படையினர் இருந்த இடங்களில் படையினர் நிலைகொள்வர் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பில் வாகரை மற்றும் குடும்பிமலையிலும் அம்பாறையில் திருக்கோயில், பொத்துவில் மற்றும் அதனை அண்மித்த பகுதி (10ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தாக்குதல் அதிரடிப்படை வீரர் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் இரு வெவ்வேறு பிரதேசங்களில்இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களின்போது விசேட அதிரடிப்படை வீரர் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒரு அதிரடிப்படை வீரர் காயமடைந்துள்ளதாக அம்பாறை மாவட்ட தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் பாதுகாப்பு கடமை நிமித்தம் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விசேட அதிரடிப்படை அணியொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் (10ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுமூலம் தீர்வு என்று கூறிக்கொண்டு போர்ப் பயிற்சி அளிக்கின்றது இந்தியா

### வீரமணி குற்றஞ்சாட்டு

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டுமென்று கூறும் இந்திய மத்திய அரசு, இலங்கைக்கு எந்தவகையில் இராணுவ உதவி செய்வது நியாயமாகும்?

பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று கூறிக்கொண்டு மறுபுறம் போர்ப் பயிற்சி அளிக்கின்றது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்திய அரசு, இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவது குறித்து கடும் விசனம் தெரிவித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

நோர்வேயின் சமாதான முயற்சியால் ஆறு ஆண்டுகள் நடைமுறையில் இருந்த போர் நிறுத்த ஒப் (10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

## முஸ்லிம் கட்சிகளுடன் பேசிய பின் கூட்டமைப்பின் முடிவு வெளியாகும்

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் பேசிய பின்னரே கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்த முடிவு எடுக்கப்படும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புதிய உத்திகளை கையாளவுள்ளதாக அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து கூட்டமைப்பு நேற்றுக் கூடி ஆராய்ந்தது. இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக கேட்டபோதே மாவை சேனாதிராஜா எம்.பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் (10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2007 உயர் தர பரீட்சையில் '3A'சித்தி பெற்ற மாணவர்களின்


### கௌரவிப்பு நிகழ்வு - 15.03.2008




யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்




மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி.




உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்கள்.




சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்




உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்.

(தொடர்ந்து வரும்)

# சித்திரை வருடப் பிறப்பே தமிழர்களின் புத்தாண்டு

## இந்து மாமன்றம் அறிவிப்பு

சித்திரை வருடப் பிறப்பே தமிழர்களின் புத்தாண்டு என அகில இலங்கை இந்துமா மன்றம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக அகில இலங்கை இந்துமா மன்ற பொதுச் செயலாளர் க.நீலகண்டன் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழகத்தில் தைப் பொங்கல் தினமே புத்தாண்டுப் பிறப்பு எனும் செய்தி வெளியானதைத் தொடர்ந்து இலங்கையிலும் தைப் பொங்கல் தினமா அல்லது சித்திரை மாதப் பிறப்பா? புத்தாண்டுப் பிறப்பு என்ற வினா எழுந்துள்ள நிலையில், இலங்கையில் வாழும் இந்து மக்கள் இது பற்றித் தீர்க்கமான முடிபு எடுப்பது உசிதம் என்று கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இது பற்றி ஆராய்வதற்கு ஓர் ஆய்வரங்கை இம் மாதம் 8 ஆம் திகதி மாமன்றத் தலைவர் வி.கைலாசபிள்ளை தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தியது.

இதில் சிவாச்சாரியர்கள், சமய அறிஞர்கள், வித்துவான்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இவ்வாய்வரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் சித்திரை மாதப் பிறப்பையே புத்தாண்டுப் பிறப்பாகக் கொள்வது சரியானதும் முறையானதும் ஆகும் என அகில இலங்கை இந்துமா மன்றம் இந்து மக்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த ஆய்வரங்கு தொடர்பாக நல்லை ஆதீன முதல்வர் அனுப்பி வைத்திருந்த சிறப்புச் செய்தியில் ஆண்டாண்டு காலமாக நமது மூதாதையர்கள் மத்தியில் சித்திரை மாதப் பிறப்பே புத்தாண்டாக அமைந்திருந்தது மட்டுமன்றி தத்துவ விஞ்ஞான ரீதியாகவும் கிரக நிலைச் செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு தொடர்ந்தும் அதனையே ஏற்றுக் கொண்டு பின்பற்றுவது சாலப் பொருத்தம் என்று குறிப்பிட்டுள்ளார்.

வாக்கிய பஞ்சாங்கக் கணிதர் ஸ்ரீ.இ. வெங்கடேச ஐயர் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைத்துள்ள கருத்துக் குறிப்பிலும் இக்கருத்தையே' ஏற்றுக் கொண்டார் என இந்துமா மன்றம் தெரிவித்துள்ளது. (அ)

## இரண்டாயிரம் பட்டதாரிகளுக்கு ஏப்ரலுக்கு முன் ஆசிரியர் நியமனம்

2 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது. இப் பட்டதாரிகள் நியமனங்களின் மூலம் தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறும் என கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

ஏப்ரல் விடுமுறைக்கு முன்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கல்வி அமைச்சுத் திட்டமிட்டுள்ளது. மாகாண மட்டக் கல்வி அமைச்சின் கோரிக்கைகளை ஏற்று மாகாண சபைகளின் பொறுப்பில் இயங்கும் பாடசாலைகள் சார்ந்த ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்என அவர் மேலும் தெரிவித்தார். (ச-7)

## அரசுடன் இணைந்து போட்டியிடுமாறு முஸ்லிம் காங்கிரஸுக்கு அழைப்பு

கிழக்கு மாகாண சபைக்காக நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீமுக்கும் ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள பசில் ராஜபக்ஷவின் காரியாலயத்திலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. பசில் ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று அவரது காரியாலயத்திற்குச் சென்ற முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம், பசில் ராஜபக்ஷவுடன் சுமார் ஒரு மணித்தியாலம் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும் இந்த அழைப்புத் தொடர்பாக தன்னால் தனித்து முடிபெடுக்க முடியாது எனவும் நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீடத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் பின்னரே உறுதியாக முடிபெடுக்க முடியும் என்று ஹக்கீம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது தொடர்பாக நாளை அல்லது எதிர்வரும் திங்கட்கிழமை முடிபெடுக்கப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் ஹலி தெரிவித்துள்ளார். (ச-5)

## கலை கலாசாரப் பேரவை செயற்குழுக் கூட்டம்

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்குச் செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)


## University of Jaffna - Sri Lanka

### NOTICE

Aptitude Test for the Selection of Candidates for B.Sc.in IT, B.Arch. and B.Design Degree Courses, University of Moratuwa

**The above tests for the Jaffna candidates will be held in the following manner at the Ramanathan Hall of the Ramanathan Block, University of Jaffna,**

| Course/Test | Date | Time |
|---|---|---|
| B.Sc.in Information Technology | 22.03.2008 | 10.00 a.m. |
| B.Des. (Fashion Design & Product Development) | 22.03.2008 | 01.00 p.m. |
| B.Arch. | 23.03.2008 | 09.00 a.m. |
| B.Design | 23.03.2008 | 01.30. p.m. |

Registrar
2008.03.19

(C-919)

University of Jaffna
Jaffna.

# இன்று ஒரு தகவல்

## அம்மாவா? அப்பாவா?

ஒரு சின்னப் பையனிடம் ``உங்கள் வீட்டிலே அம்மா புத்திசாலியா? அப்பாபுத்திசாலியா?'' என்றுகேட்டேன். அவன் அலட்சியமாக என்னைப் பார்த்துச் சிரித்தான் ``என்ன சார்? இந்தக் காலத்திலே இது கூடவா தெரியா மல் இருக் கிறீர்கள்?'' என்றான். ஒரு சின்னப்பையன் என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுவிட்டானே என்று நினைக்கிறபொழுது எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. அப்பொழுது என் தாத்தா சொன்ன ஒரு கதை ஞாபகத்துக்கு வந்தது.

ஒரு ஊரிலே ஓர் அம்மாவும் பிள்ளையும் இருந்தார்கள். மகனுக்கு திடீரென்று தேசாந்திரம் போய்வர வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. ஊரூராகப் போய் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை. மகனைப் பிரிந்திருக்க அம்மாவுக்கு மனமில்லை. எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள் போயே தீருவேன் என்று மகன் ஒற்றைக் காலிலே நின்றான். அவனைத் தடுக்க முடியாது என்ற நிலையில் அம்மா ``நீ தேசாந்திரம் போவதென்று தீர்மானித்துவிட்டாய்... நான் தடுக்கவில்லை. போய்வா'' ஆனால் போகிற பொழுது இரவானாலும் பகலானாலும் புளியமரத்து நிழலிலே தான் தங்க வேண்டும். திரும்பிவரும் பொழுது இரவிலும் பகலிலும் வேப்பமர நிழலிலேதான் தங்க வேண்டும். அப்படித் தங்குவேன் என எனக்கு வாக்களித்துவிட்டுச் செல் என்றாள். அப்படியே செய்வதாக வாக்குறுதியளித்த மகன் புறப்பட்டுப் போனார்.

போகும் போது புளியமர நிழலிலேயே தங்கினான், தூங்கினான். அப்படிப் போய்க் கொண்டிருக்கும் போது ஏழாவது நாள் அவன் உடம்புக்கு சுகமில்லாமல் போய்விட்டது. மிகவும் பல வீனமடைந்துவிட்டான். இனிமேல் நடக்க முடியாது என்கிற நிலைமை. இனிமேல் தொடர்ந்து போக உடல் நலம் இடம் கொடுக்கவில்லை. வீட்டுக்குத் திரும்பிவிட முடிவு செய்தான். திரும்பிவரும் போது வேப்பமர நிழலிலே தங்கினான். நாளுக்கு நாள் உடம்பு சரியாகிவிட்டது. ஏழாவது நாள் வீடு வந்து சேர்ந்த போது உடம்பு பழையபடி கலகலப்பாகிவிட்டது. தேசாந்திரம் போன பையன் உடனடியாகத் திரும்பிவிட்டானே என்று அம்மா ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் பையனுக்கு இப்படி ஆகுமென்று அவளுக்குத் தெரியும். பையன் சீக்கிரமாகத் திரும்ப வேண்டும் என்பதற்காகத்தானே அவள் அந்த யோசனையை மகனுக்குக் கூறினாள். திரும்பி வந்த மகன் என்னை ஏன் போகும் போது புளிய மர நிழலிலும் திரும்பும் போது வேப்பமர நிழலிலும் தங்கும்படி சொன்னீர்கள் என்று கேட்டான். அதற்குத் தாய் சொல்கிறாள்.

``மகனே! புளியமர நிழல் உடம்புக்கு உஷ்ணத்தைக் கொடுக்கும் நோயை உண்டாக்கும். நீ தொடர்ந்து புளியமர நிழலில் தங்கியபடியால் உனக்கு நோய் உண்டானது. பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிவரும் போது நீ தங்கியது வேப்பமர நிழல். அது உடம்புக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடியது. நோயைத் தீர்க்கக்கூடியது. அதனாலே உன் நோய் சுகமாகிவிட்டது. உனது தேசாந்திரப் பயணத்தைத் தடுப்பதற்காகவே உன்னிடம் அந்த வாக்குறுதியைப் பெற்றேன்.''

பார்த்தீர்களா அம்மாவின் புத்துசாலித்தனத்தை அப்பாவாக இருந்தால் இப்படியா செய்வார்? ஓர் அப்பா பையனிடம் 100 ரூபா கொடுத்து அதை அடுத்த ஊரிலே வசிக்கும் மாமாவிடம் கொடுத்து வருமாறு அனுப்பினார். போகும் வழியில் எங்கேயாவது மரத்தடியில் படுத்துத் தூங்காதே என்று எச்சரிக்கையும் செய்தார். பையனுக்கு எச்சரிக்கையாக வாழ்வது எப்படி என்பதைக்கற்றுக் கொடுப்பதற்காக இப்படிச் செய்தார். பணத்தை வாங்கிக் கொண்ட பையன் அப்பா சொன்னதை மறந்து வழியில் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கினான். அவனுக்குத் தெரியாமல் அவன் பின்னாலே போன அப்பா அவன் சட்டைப் பையிலிருந்த 100 ரூபாவை மெதுவாக எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்.

பையன் தூங்கி எழுந்ததும் சட்டைப்பையை தடவிப் பார்த்தான். பணத்தைக் காணவில்லை. அழுது கொண்டே திரும்பி வந்து அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னான். அப்பா சிரித்துக்கொண்டே சொன்னார். ``அதற்குத் தான் நான் அரம்பத்திலேயே உன்னை எச்சரித்தேன். நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன். அந்தப் பணம் எங்கேயும் திருட்டுப் போகவில்லை.. நான்தான் உனக்குத் தெரியாமல் எடுத்து வந்து விட்டேன்... இதேபார் அந்தப் பணம் என்று சொல்லிக் கொண்டே தனது சைட் பாக்கெற்றில் கையை வைத்தார். அது ஓட்டையாக இருந்தது. அதை எவனோ கத்தரித்து பணத்தை எடுத்துவிட்டான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அதிரடிப்படையினரே எனது மகனை படுகொலை செய்தனர்

## ஜனாதிபதி ஆணைக்குழு முன் மாணவனின் தந்தை சாட்சியம்

(கொழும்பு)

அதிரடிபடையினரே எனது மகனைப் படுகொலை செய்தனர். ஆனால் திருகோணமலை நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை யின் போது அதிரடிப் படையினர் குறித்து எதனையும் நான் கூறவில்லை. அச்சுறுத்தல் வரும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும் என்று திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவனான ஹேமச் சந்திரனின் தந்தையான பொன்னுத்துரை யோகராஜா தெரிவித்தார்.

கடந்த இரண்டு தினங்களாக ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்திருக்கின்றேன். இதனால், அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள என்னிடம் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கேட்டு என்னை அசௌகரியத்திற்கு உள்ளாக்க வேண்டாம் என்ற கோரிக்கையையும் அவர் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

திருகோணமலையில் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட ஐந்து மாணவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளின் போது நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக செய்மதி தொழில் நுட்பத்தின் ஊடாக சாட்சியம் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவரிடம் நேற்று முன்தினம் சுழற்சி முறையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர் மேலும் கூறியதாவது: 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி சம்பவ இடத்தில் நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர். நான் இராணுவம் என்று தமிழில் கூறுவது ஆயுதம் தாங்கிய அனைத்து படை வீரர்களையும் சார்ந்ததாகும்.

இந்த நூற்றுக்கணக்கான படையின ரையும் மீறி இந்தச் சம்பவம் நடந்திருக்க சந்தர்ப்பமே இல்லை.

சம்பவ இடத்தில் கடமையிலிருந்த அத்தனை படை வீரர்களையும் இந்த ஆணைக்குழுவிசாரணைக் குட்படுத்த வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி அந்த அசம்பாவிதம் இடம் பெற்றது. இதில் எனது மகனும் அவ னது நண்பர்களும் ஈவிரக்கமின்றி அகோரமாக படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு பிற்பட்ட காலத்தில் நீதிமன்ற விசாரணைகளில் சாட்சியமளித்திருந்தேன். ஆனால் குடும்பத்தினரின் பாதுகாப்புக் கருதி முழு விடயங்களையும் நான்நீதிமன்றுக்கு கூறவில்லை.

மகனை அதிரடிப்படையினரே கொன்று போட்டனர் என்ற உண்மையை அறிந்திருந்தும் நீதி மன்ற விசாரணைகளின் போது அதிரடிப் படையினர் தொடர்பான எந்தத் தகவலையும் நான் கூறவில்லை.

உண்மையே கூறுகிறேன் என்று நீதிமன்றுக்கு சத்தியம் செய்த நான் அன்று எதிர்நோக்கிய பயங்கர மான சூழ்நிலையினால் உண்மையைச் சொல்வதற்கு மறுத்தேனே தவிர, பொய் எதனையும் கூறவில்லை. அன்று நான் வெளிப்படையாக சாட்சியமளித்திருந்தால் இன்று நானும் எனது குடும்பத்தாரும் உயிருடன் இருந்திருக்க முடியாது.

அன்று கூறுவதற்கு தயங்கிய அனைத்து விடயங்களையும் இன்று கூறியிருக்கின்றேன். ஆணைக் குழுவின் தலைவர் அவர்களே கடந்த இரண்டு தினங்களாக உங்களது ஆணைக்குழுவுக்கு சாட்சிய மளித்துள்ளேன். இரண்டு பிள்ளைகளை பறிகொடுத்த அந்த அதிர்ச்சியில் இருந்து நான் இன்னும் மீட்சி பெறவில்லை. இந்நிலையில் என்னிடம் கேட்கப்பட்ட ஒரே விடயம் குறித்தே மீண்டும் மீண்டும் கேட்கப்படுகின்றது. இந்த விடயமானது மன உளைச்சலிலுள்ள என்னை மேலும் அசௌகரியப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. எனவே இதன்னத் தவிர்த்து எனக்கு உதவி செய்யுமாறு தயவாக கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கு சாட்சிய மளிக்க வந்திருப்பது எனது மகனை இழந்துள்ளமையால் தான். எனக்கு நீதி கிடைக்க வேண்டும். இது தொடர்பாக ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு என்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன். (அ-5)

# அதிரடிப்படையினரின் சட்டத்தரணியின் கேள்விகள் கவலையளிக்கின்றன

## ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

விஷேட அதிரடிப்படை சார்பில் ஆஜராகியிருக்கும் சட்டத்தரணி கேட்கும் கேள்விகள் எனக்கு கவலையளிக்கின்றன. இரண்டு பிள்ளைகளை இழந்து நிற்கும் ஒரு தந்தையிடம் தற்போது கேட்கப்பட்ட கேள்விகள் ஏற்புடையதாகவும் அதேநேரம் தொடர்புடையதாகவும் இருக்கவில்லை என்று பிரித்தானியாவின் இராணி சட்டத் தரணியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நிபுணர்குழு உறுப்பினருமான டானால் ஏர்பன் சுட்டிக் காட்டினார்.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற 5 மாணவர்களின் படுகொலை தொடர்பான இந்த விசாரணைகள் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு வர்த்தக விளம்பரம் அல்ல என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் ஆணைக் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடலாகமவிடம் கேட்டுக் கொண்டார்.

'அதிரடிப்படை சார்பாக ஆணைக் குழுவில் ஆஜராகியிருந்த சட்டத் தரணி எஸ். எல்.குணசேகர, சாட்சியான பொன்னுத்துரை யோகராஜாவிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆட்சேபனை தெரிவித்தே மேற்கண்ட தகவல்களை டானல் ஏர்வன் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

பொன்னுத்துரை யோகராஜா என்ற அந்த சாட்சி இரண்டு பிள்ளைகளை இழந்து மனமுடைந்த நிலையில் இருக்கின்றார். இந்த ஆணைக்குழுவின் முன் னிலையில் சாட்சியமளிக்கும் அவர் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டும்.

ஆனால், விஷேட அதிரடிப் படை சார்பில் சட்டத்தரணி கேட்கும் கேள்விகள் என்னை கவலைக்குட்படுத்துகின்றன. அவரது கேள்விகளின் தன்மையும் அதன் தமிழாக்கத்தொனியும் சாட்சியை ஒரு இறுக்கமான சூழ்நிலைக்கு இட்டுச் செல்வதாகவே அமைந்திருக்கின்றது.

இதன் மூலம் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவினால் சாட்சியாக முன்னிருக்கும் பொன்னுத்துரை யோகராஜா ஒருவித நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுவதாக உணர முடிகின்றது.

இன்றைய விசாரணையின் மூலமாக அவர் மன அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இந்த விசாரணைகளில் மேலும் சாட்சியமளிக்க இருவர் இருக்கின்றனர். ஆகவே, விசாரணைகள் அனைத்தும் ஏற்புடைய விடயங்களை நாடிச் செல்லக்கூடியதாக அமைய வேண்டும்.

ஆனால், சற்று நேரத்திற்கு முன்னர் அப்படி நடக்கவில்லை. 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் மீதான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு வர்த்தக விளம்பரம் இல்லை.

இந்த விசாரணைக்கு திருகோணமலையில் புத்தர் சிலை சட்ட ரீதியாக வைக்கப்பட்டதா? இல்லையா? என்பது தேவையான விடயமல்ல.

சாட்சியின் கருத்துக்கள் பொய் என்று கூறும் சட்டத்தரணி முறையற்ற ஆயுதத்தைப் பாவித்து பொன்னுத்துரை யோகராஜா மீது குற்றம் சாட்டவே முயற்சிக்கின்றார்.

புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் திருகோணமலை நீதிமன்ற தீர்ப்பை சிங்களவர்கள் மதிக்கவில்லை என்று சாட்சியமளித்த சாட்சியை குற்றம் சாட்ட நினைக்கின்றார்.

தேவையற்ற கேள்விகளை கேட்டு அவரது மன நிலையை திசை திருப்பியதுடன் சாட்சியின் உண்மைத் தன்மைகள் வெளிக்கொணர முடியாமல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, சாட்சியாக ஆஜராகும் நபர் கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும். (அ-5)

## இராசிபலன்

21.03.2008
(பங்குனி 08, வெள்ளிக்கிழமை)
பூரணை பின்னிரவு 12.16மணிவரை
உத்தரம் பின்னிரவு 04.48 மணி வரை
இராகுகாலம் 10.47-12.17மணிவரை
சுபநேரம்-06.17-07.47 மணிவரை
பங்குனி உத்தரம், பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிக செலவு, ரோகநிலை, தீடீர் நன்மை. |
| கடகம் | மாதர்நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ண நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை. பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரியதடங்கல், தர்மம், போசனசுகம். |
| மகரம் | நல்லமுயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வுநிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசனசுகம். |

வளவன்



# வட்டுக்கோட்டை சங்கரத்

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமே

# இரதோற்சவ சிறப்பித

## வடம் பிடிப்போம் வரம் பெறுவோம்


சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர பெருமான் தேரேறி பவனி வரும் இந்நாளில் அடியார்கள் அலைகடல் என திரண்டு வந்து அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்று ஆனந்தப் பெருவாழ்வு அடைவீர்களாக!

இத்திருநாளில் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகி, அவலம் அகன்று, ஆனந்தம் பொங்கி, சண்டைகள் தீர்ந்து, சமாதானம் மலர்ந்து, தொல்லைகள் தொலைந்து, வசந்தங்கள் பெருகி அனைவரும் வளமான –நிறைவான –மலர்வான –மகிழ்வான வாழ்வு வாழ புதுயுகம் பிறக்கட்டும் தாயே என்று வாழ்த்தி வணங்குகின்றோம்!

வடம் பிடிப்போம் ! வரம்பெறுவோம் !

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்,
வட்டுஇந்து வாலிபர் சங்க கொழும்புக்கிளை,
வட்டுஇந்து வாலிபர் சங்க கனடாக்கிளை.

## மகோற்சவ பிரதமகுருவின்




## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்தில் உள்ள புகழ் பெற்ற அம்பாள் ஆலயங்களில் சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். பத்திரகாளி சமேத வீரபத்திரராக அமைந்து அருள் பாலிக்கும் எம் அன்னையின் அருள் எங்கும் பொலிவதாக! நாட்டில் ஏற்பட்டுள்ள இன்னல்கள் நீங்கி அமைதியும் சாந்தியும் சுபீட்சமும் ஏற்படப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி

ஆறுமுகம் சிவகெங்காதரகுருக்கள்
(ராதாஐயா)
மகோற்சவபிரதம குரு, பத்திரகாளி கோயில்,
சங்கரத்தை.



## பதினாறு செல்வமீயும் தேவி

அல்லல்கள் நீங்கி அவனியுளோர்
ஆனந்தமாய் வாழ அருளும் தேவி
கல்வியொடு செல்வம் நற்கலைகள் யாவும்
களிப்போடு ஈயும் தேவி
நல்லன எண்ணி நன்மைகள் பல செய்திட
நல்லருள்புரியும் நாயகி
பல்லவர்கால நற்கலை மிளிர் கோபுரம்
பாங்காய் அமைந்துள்ள தேவி
பத்திரகாளி எனும் நல் நாமங்கொண்டு
பக்தர் கருளும் தேவி
எத்திக்கும் நற்புகழ் பெற்றோங்கி
எழிலாயமைந்துள்ள தேவி
புத்தி பலம் நற்செல்வம் புகழ்
ஈந்துவக்கும் எம் தேவி
பக்தி செய்து பாடிப் பதம் பணிவோர்க்கு
பதினாறு செல்வமீயும் பத்திரகாளி!

சி.சபாநாதன், சங்கரத்தையூர்,

## வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை ஆலயத்தின் வரலாறும் சிறப்புகளும் வழிபாட்டு முறைகளும்

யாழ்ப்பாணத்தின் வலிமேற்கு பிரதேசத்தில் அமைந்திருக்கும் அழகிய சிற்றூர் சங்கரத்தை. அவ்வூரின் மேற்குப்பகுதியில் நெல்வயல்களால் சூழப்பட்ட பிட்டியம்பதி என்னும் புண்ணிய தலத்திலே பத்திரகாளி அம்மை வீரபத்திரர் சமேதராக கோயில் கொண்டு அடியார்களுக்கு அருள்பாலித்த வண்ணம் இருக்கிறார்.

பிட்டியம் பதி என்பது பூர்வத்தில் இரு மருந்துய்ய முதலியார் பரம்பரையில் வந்த பெருமையினாரின் குமாரர் முதன்மையினார் என்பவருக்குரியது. அவ்விடத்தில் உண்டாகி இருந்த புளியமரத்தில் அமர்ந்திருந்த கிளிகள் அயலில் உள்ள நெல்வயல்களில் வேளாண்மைக் காலத்தில் வேளாண்மையை சேதப்படுத்துவதை கண்ணுற்ற முதன்மையினார். அக் காலத்தில் (1698) வட்டுக்கோட்டை கிறிஸ்துவ தேவாலய அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த தச்சுத்தொழிலாளியை அழைத்து அப்புளியமரத்தை தறிக்கும் படி ஏவினார். அதற்கு அவன் மறுப்பு தெரிவிக்கவே தாமே அதனை செய்ய முனைந்தார். அப்போது அம்மரத்தின் அடிப்புற்றுக்குள் இருந்து வெளிப்பட்ட நாக சர்ப்பம் அவரை துரத்திச் சென்றது. சிறு தூரம் சென்றதும் பாம்பு தலைதூக்கி ஆடி நிற்பதைக் கண்ட அவர் தம் தவறை யுணர்ந்தருளும் படி தம்முட் பிரார்த்தித்து தமது இருப்பிடத்திற்குச் சென்றார். அன்றிரவே அம்மையார் முதன்மையானின் சொப்பனத்திலே தோன்றி நமக்கு நிழல் அமைத்து வழிபடுமாறு பணித்தார். அடுத்த நாளே அவ்விடத்தில் நிழல் அமைத்து வழிபடத் தொடங்கினார். அம்மரமே இன்றும் தலவிருட்சமாக வியாபித்து நிற்கின்றது. அவரின் வழித்தோன்றல்களே அன்றில் இருந்து இன்றுவரை பூசகர்களாகவும் அறங்காவலர்களாகவும் இருந்து வருகின்றனர். இது கர்ண பாரம்பரியமான கதை.

பிட்டியம்பதியில் கோயில் கொண்டமையினால் பிட்டியம்பதி பத்திரகாளியம்மை என்ற நாமம் அம்பாளிற்கு ஏற்பட்டது. புளியம்மரத்தடியில் கதிரை ஒன்றை வைத்து அதனை வீரபத்திரக்கடவுளுக்குரிய ஆசனமாக மனத்தின்கண் நினைத்து வழிபட்டு வந்தனர். அம்பாளின் அற்புதங்களால் கவரப்பட்டு அயற்கிராமங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து வழிபடத் தொடங்கினார்கள். இங்கே திராவிட முறைப்படி பூசைகள் நடைபெற்று வந்ததுடன் பொங்கி மடையிடல், உயிர்ப்புலி கொடுத்தல் போன்ற வைபவங்களும் நடைபெற்றுவந்தன.

சிறு குடில் அ
யார், வைரவர்
தானத்தில் பிரதி
யில் கொடியேற்
நாள் தீர்த்தத்
கிரகங்கள் 188
பட்டன.
1947ஆம் அ
னார்கள். இதே
அங்கமாக வி
நீத்துக்காய் வெ
கடாக்களையும்
கோவில் ஆகம
1978ஆம் அ
நடைபெற்று
1989ஆம் ஆண்
ஆண்டு வீரபத்தி
ரோகினி நட்சத்
கும்பாபிஷேகம்
கப்பட்டு கும்பாபி
ரம் அமைக்கப்
அமைக்கும் பல


அனுசரணை வழங்குவோர்:-

கஜமுகன் ஹாட் வெயர்ஸ்
Pepsi யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்
147,149 ,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/905) T.P.No:222 2833, 222 7144

புதிய சாந்தி அரைக்கும் ஆலை
நல்லமுறையில் நெல்உடைத்து தீட்டியும் மாவாகவும் மிளகாய்த்தூள், சீயாக்காய்த்தூள், ஈர அரிசியை மாவாகவும், உழுந்து, பயறு போன்றவற்றை சிறந்த முறையில் குறுகிய நேரத்தில் அரைத்து மாவாகப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
புதிய சாந்தி அரைக்கும் ஆலை
சங்கரத்தை சந்தி அருகாமை
பிராதன வீதி,
வட்டுக்கோட்டை.
(சி/890)

S.M.T பந்தல் அன் வாகன சேவை
மங்களகரமான வைபவங்களுக்கான சொக்கட்டான், வில்லு பந்தல்களை சிறப்பாக அமைத்திடவும் சகல வைபவங்களுக்குமான தகரப்பந்தல்கள், கதிரைகள், பாத்திரங்கள், சோடணைகள் என்பவற்றை பெற்றிடவும் சகல தேவைகளுக்குமான வாகன வசதிகளை பெற்றிடவும் திருமண வைபவங்களுக்கான சொகுசுகார் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய இடம்
S.M.T பந்தல் அன் வாகன சேவை
T.P-0602214496 அராலிமத்தி ,வட்டுக்கோட்டை.
(சி/895) உரிமையாளர்: திரு.ச.மோகனதாஸ்

R.S.T. றோஸ் நாடு
அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் கொப்பரா, எள்ளு மற்றும் இலுப்பைப் பருப்பு போன்றவற்றை 3 கிலோ முதல் ஆயிரம் கிலோ வரை உடன் இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக ஊற்றவும் நாடவேண்டிய ஒரே இடம்
பாலன் அரிசி ஆலை
மாவடிச் சந்தி,
(சி/889) வட்டுக்கோட்டை.

சிவ

பலசர
கற்
ஸ்ரீ

உங்களது நன்மதிப்புப்பெற்ற பிரீடம் எல்.எம்.எல். ஸ்கூட்டர், விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள புதிய நிறுவனம்
எஸ்.பீ.என். மோட்டர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி ,
யாழ்ப்பாணம்.
(சி/906)

வட்டு .இந்து வாலிபர் சங்கம் புத்தகக் களஞ்சியம்
பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்;
வட்டு .இந்து வாலிபர் சங்க புத்தகக் களஞ்சியம்
T.P-021 222 3038 யாழ்ப்பாணக் கல்லூரி அருகாமை,
021 222 3896 பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
(சி/891)

குரு போட்டோ அன் வீடியோ பந்தல் சேவை
மங்களகரமான மற்றும் அனைத்து வைபவங்களுக்குமான புகைப்படவீடியோ பிரதிகளை சிறந்த முறையில் பெற்றிடவும் சொக்கட்டான் வில்லு பந்தல்களை சிறப்பாக அமைத்திடவும் சகலவைபவங்களுக்குமான தகரப் பந்தல்கள், கதிரைகள், பாத்திரங்கள், சோடணைகள் என்பனவற்றை ஒரே இடத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
குரு போட்டோ அன் வீடியோ பந்தல் சேவை
சங்கரத்தை வட்டுக்கோட்டை
உரிமையாளர் :- திரு.சி.குருபரன்
T.P.No: 021 4501237 - 0602219181
(சி/894)

அம்பாள் ஸ்
வட்டுக்கோட்டைக்கான Shell Ga
கள் மற்றும் பலசரக்குப் பொருட்
கால்நடைத் தீவனங்கள் மற்று
என்பவற்றை மொத்தமாகவ
பெற்றுக்கொள்ள நாடவே

அம்பாள் ஸ்ரோர்ஸ்
(சி/887) அறுகின்சன் வீதி,

துவிச்சக்கர வண்டிகள் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் TV, டெக்வகைகள், றேடியோ வகைகள், அன்ரனா வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
இல.50.52த54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No:021 222 2988, 222 3096,222 2368
(சி/907)


விநாயகர் தொலைத் தொடர்பகம்
உள்ளூர், வெளியூர் தொலைபேசி அழைப்புக்களையும் பக்ஸ் வசதிகளையும் குறைந்த கட்டணத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
விநாயகர் தொலைத் தொடர்பகம்
(ஆத்தியடி விநாயகர் ஆலயம் முன்பாக)
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
(சி/892) உரிமையாளர்:-ச.மயூரன் (குமரன்)

ஒளிக் கதிர் அழகு மாடம்
பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், பாதணி வகைகள், போட்டோ பிரதி கவரிடுதல், Kitcard என்பவற்றை நீங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
ஒளிக் கதிர் அழகு மாடம்
(சி/893) தெல்லிப்பளைவீதி, வட்டுக்கோட்டை.

# பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிட சர்தாரிக்கு கல்வித் தகுதி இல்லை ?


(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான்தேர்தலில், பேட்டியிட குறைந்த பட்சம் இளநிலை பட்டப் படிப்பு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அந்நாட்டு, பிரதம்ராகப் போகும் சர்தாரி, லண்டனில் உள்ள 'பெனிட்டன்' வர்த்தகவியல் கல்லூரியில், பி.எட், பட்டம் பெற்றிருப்பதாக கூறியுள்ளார். ஆனால், அப்படி ஒரு கல்வி நிறுவனமே இல்லை என்பது தான் சுவாரஸ்யம்.

பாகிஸ்தானில்,2002 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டபோது, போட்டியிடுவதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதியாக, இளநிலை பட்டப் படிப்பை நிர்ணயித்து, அதிபர் முஷாரப், புதிய சட்டம் கொண்டுவந்தார். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் மறைந்த பெனாசீர் பூட்டோவை திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே, பிரிட்டனுக்கு சென்றார் ஆசிப் அலி சர்தாரி.

1970 ஆம் ஆண்டுகளில் இலண்டன் ஸ்கூல் ஆப் பிசினஸ் ஸ்டடீஸ் என்ற கல்லூரியில் இளநிலைப் பட்டப்படிப்பு பாடப்பிரிவில் சேர்ந்தார். ஆனால், அந்தப் படிப்பை முழுமை செய்யவில்லை என்று கூறப்படுகிறது. தனது சுயசரிதை புத்தகத்தில், "லண்டன் பெனிட்டன் ஸ்கூல்" என்ற வர்த்தகவியல் கல்லூரியில் படித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இலண்டனில் இந்தப் பெயரில் கல்வி நிறுவனம் ஒன்று இருந்ததாகவோ இருப்பதாகவோ ஆதாரம் இல்லை. இதுதொடர்பாக சர்தாரியிடம் கேட்டபோது, "நான் இளநிலை பட்டதாரி தான். பி.எட். பட்டப்படிப்பு படித் ததாக நினைக்கிறேன் அதன் சான்றிதழைக் கூட பார்த்தது நன்றாக நினைவிருக்கிறது" என்றார். இருப்பினும் பட்டப்படிப்பு சான்றிதழ் என்பது தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒரு தடையாக இருக்காது என்று நம்புவதாகவும் அவர் கூறி யுள்ளார்.

ஏற்கனவே, இணையத் தளங்களில் 'திருவாளர்10 சதவீதம்' என்று கிண்டல் செய்யப்பட்டு வருபவர் சர்தாரி. படுகொலை செய்யப்பட்ட பெனாசீர் பூட்டோ, இரண்டாவது முறையாக, பாகிஸ்தான் பிரதமராக பதவி வகித்த போது, சர்தாரிக்கு 10 சதவீத கமிஷன் தொகை அளிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டால் தான் இந்த கிண்டல் பெயர். இப்போதும், இணைய தள குறும்புக்காரர்கள் சர்தாரியை கிண்டல் செய்யத் தவறவில்லை.



"நான் பட்டப்படிப்பு முடித்தவன் தான். ஆனால் எந்த கல்லூரியில், எப்போது படித்தேன் என்பது தான் நினைவில்லை" என்று சர்தாரி கூறுவதைப் போல, காட்டூன் போட்டு கிண்டலடித்துள்ளனர். (அ-5)

## பெண்கள் பாடசாலை வெடிவைத்துத் தகர்ப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடமேற்கு பகுதியில் உள்ள டாரா ஆதம் கேல் என்ற இடத்தில் உள்ள பெண்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுமிகளை பள்ளிக்கூடத்துக்கு செல்லக்கூடாது என்றும் அவர்கள் மதபோதனை பாடசாலைக்கு வரவேண்டும் என்று தீவிரவாதிகள் எச்சரித்தனர்.

இந்த எச்சரிக்கைக்கு மாணவிகள் செவி சாய்க்கவில்லை. அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கூடத்துக்கு சென்று வந்தனர். இதனால் அந்த பள்ளிக்கூடத்துக்கு தீவிரவாதிகள் வெடிவைத்து தகர்த்தனர். இதில் 9 அறைகள் கொண்ட அந்தப் பள்ளிக்கூடம் முற்றிலும் இடிந்து நொறுங்கியது. (அ-5)

## உலக தரிசனம்

# 'இஸ்லாமியர்களே உலகில் உயர்ந்தவர்கள்' ஈரானில் பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடம்

## அமெரிக்க அமைப்பு குற்றச்சாட்டு

ஈரானின் பள்ளிக்குழந்தைகள் இஸ்லாத்தின் ஈடு இணையற்ற உயர் நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், முஸ்லிம் அல்லாதவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டும் என்றும், ஈரானிய அரசு அவர்களுக்கு பாடம் புகட்டி வருகிறது என்று அமெரிக்காவில் இருந்து இயங்கும் "ஃ பிரீடம் ஹவுஸ்" என்ற அமைப்பு கூறியுள்ளது.

ஈரானிய பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ள பாட நூல்களில் 95 நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையில் பள்ளிச் சிறார்களின் சகிப்புத் தன்மை மிகவும் முறையாக அகற்றப்பட்டுள்ளது என்றும், இதனை தற்செயலானது என்று கூற முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

ஈரானின் உள்ளூரில் பார்சி மொழி பேசுவோரால் நடத்தப்பட்ட இந்த மதிப்பீட்டின் படி, பெண்கள் ஆண்களை விட உயர்ந்தவர்களாக கருதவேண்டும் என்றும், மேற்குலக நாடுகளை சாத்தான்கள் போலக் கருத வேண்டும் என்றும், ஈரானிய பாடநூல்களை பள்ளிச் சிறார்களுக்கு பாடம் புகட்டுவது தெரிகிறது.

ஈரானின் அடுத்த தலைமுறையினர் வெளியுலகத்தை எவ்வாறு நோக்க வேண்டும் என்பதையே இந்த நூல்கள் திட்டமிட்டு வடி வமைப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது. (அ-5)

# காஷ்மீரில் குண்டுவெடிப்பு

இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றில், குறைந்தது 12 பேருக்காவது காயம் ஏற்பட்டுள்ளது. சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

ஸ்ரீ நகரின் வர்த்தக வட்டாரத்துக்கு அருகே மேம்பாலம் ஒன்றில் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைக்கப்பட்டிருந்த ஒரு பொருளே வெடித்துள்ளது.

அங்கு பல மாதங்களாக நிலவிய அமைதியை இந்த குண்டு வெடிப்பு குலைத்துள்ளது. காஷ்மீருக்கு சுதந்திரம் கோரும் தீவிரவாதிகள், சுமார் 20 வருடமாக போராடி வருகிறார்கள். (அ-5)

# பாகிஸ்தானின் முதலாவது பெண் சபாநாயகராக மருத்துவ கலாநிதி பஹ்மிதா மிர்ஸா தெரிவு



(இஸ்லாமாபாத் )

பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் முதலாவது பெண் சபாநாயகராக மருத்துவ கலாநிதி பஹ்மிதா மிர்ஷா புதன் கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்கட்சியினரால் இஸ்ரார் தரீன் என்பவர் சபாநாயகர் பதவிக்கு பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார். இந்நிலையில், புதன்கிழமை இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில், மருத்துவ கலாநிதி பஹ்மிதா மிர்ஸா 324 வாக்குகளில் 249 வாக்குகளைச் சுவீ கரித்து வெற்றி பெற்றுள்ளார். அளிக்கப்பட்ட வாக்குகளில் 5 வாக்குகள் செல்லுபடியற்றவையாக இனங் காணப்பட்டு நிராகரிக்கப்பட்டன. இஸ்ரார் தரீன் 70 வாக்குகளைமட்டுமே பெற்றிருந்தார்.

1997 ஆம் ஆண்டிலிருந்து சிந்துமாகாணத்தின் பாடின் பிராந்திய வாக்கெடுப்புகளில் தொடர்ந்து வெற்றிபெற்று வந்துள்ள பஹ்மிதா மிர்ஸா, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவர் அஸிப் அலிசர்தாரியின் நெருங்கிய நண்பரான கலாநிதி சுல்பிகார் அலி மிர்ஸாவின் மனைவியாவார். அரசியல் குடும்பமொன்றைச் சேர்ந்த பஹ்மிதா மிர்ஸா, 1999, 2002 மற்றும் 2008 தேர்தல்களில் பாராளுமன்றத்தின் உறுப்பிரனராக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவரின் பாட்டனாரான காஸி அப்துல் கயூம், ஹைதராபாத் நகர சபையின் முதல் முஸ்லிம் தலைவர் ஆவார். அத்துடன், பஹ்மிதா மிர்ஸாவின் மாமனாரான காஸி முஹமட் அக்பர், மாகாண சபை அங்கத்தவராக இருந்ததுடன் உள்துறை, நிதி, பொது விவகாரம், தகவல் என்பன உள்ளடங்கலாக பலதரப்பட்ட துறைகளில் அமைச்சுப் பதவிகள் வகித்த அனுபவம் உடையவர். மேலும் பஹ்மிதா மிர்ஸாவின் தந்தை காஸி அபித், ஹைத ராபாத் நகர சபைப் பிரிவில் தலைவராக தனது அரசியல்வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் கல்வி, நீர்வளமும் சக்தியும், உணவும் விவசாயமும், தகவல் ஆகிய துறைகளில் அமைச்சுப் பதவி வகித்தவராவார். மேலும் புதிய சபாநாயகரின் சகோதரர் காஸி அஸாத் மற்றும் மைத்துனர் காஸி அஸ்லாம் ஆகியோரும் அரசிய லில் முக்கிய புள்ளிகளாக விளங்கி வருகின்றனர். (அ-5)

# இந்த வாழ்க்கை ஒரு வரப்பிரசாதம் !

வாழ்க்கையின் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த வாழ்க்கை எனும் ரயிலில் நாம் ஒவ்வொருவரும் ஒரு பயணி. நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு ரயிலில் பயணம் செய்கிறோம். உங்களின் இந்தப் பயணம் நீங்கள் இதுவரை மேற்கொள்ளாத ஒரு பாதையின் ஊடாகச் செல்கிறது. ஒவ்வொருவரும் தாங்கள் போய்ச் சேர வேண்டிய இடத்தைப் பற்றி கவலைப்பட்டுக் கொள்கின்றனர். இந்தப் பயணம் நாம் மிக ஆனந்தமாக இருந்தாலும் மிகவும் துக்கமாக இருந்தாலும் மேற்கொள்ளப்படும். பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

நீங்கள் செய்ய வேண்டிய வியங்களைப் பற்றி பெரியதோர் கற்பனை வைத்திருந்தாலும் உங்கள் பயணம் நிற்கப்போவதில்லை. அது நடைபெற்றுக் கொண்டிருக்கும். தாம் விரும்பியவாறு தான் எல்லாம் நடைபெற வேண்டும் என மக்கள் பல எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கலாம். வெளி உலகில் ஒவ்வொரு சிறு மாற்றமும் இன்னொரு மாற்றத்தைக் கொண்டுவரும். வெளியில் எதுவும் நிரந்தரமில்லை. சில விடயங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். இன்னும் சில விடயங்கள் உங்களுக்கு கவலையினைக் கொண்டுவரும். சில விடயங்கள் உங்களுக்குப் பிடிக்கும். சில விடயங்கள் உங்களுக்குப் பிடிக்காது. இதுபோன்ற நிறைய விடயங்கள் இந்தப் பயணத்தில் அடங்கியுள்ளன. ஆனால் உண்மையான ஒரு பயணியாக நீங்கள் இருப்பதற்கு எது நடந்தாலும் உங்கள் பயணத்தை நிறுத்த முடியாது. தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டுதான் ஆக வேண்டும்.

இந்தப் பயணம் எதைப் பற்றியது என அறிய விரும்புகிறீர்களா? எல்லோருமே இப் பயணம் எவ்வளவு சுலபமாக இருக்கப் போகிறது என்பதை அறியவே விரும்புகிறார்கள். பிரச்சினைகளோ கவலைகளோ இருக்கக் கூடாது என்று தான் விரும்புகிறார்கள். அதைத் தான் நாம் ஆசீர்வாதம் என நினைக்கின்றோம். ஆனால் நாம் இப் பயணத்தில் இருப்பதால் நாம் எல்லோரும் அதிர்ஷ்டசாலிகள் என நான் மக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**மகராஜி என்னும் கௌரவப் பெயரால் அழைக்கப்படும் பிரேம் ராவட் அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகளாக உலகெங்கும் பயணம் செய்து உள் அமைதி பற்றியும் உண்மையான ஆனந்தம் பற்றியும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உரையாற்றி அவர்களுக்கு உற்சாகமும் வழிகாட்டலும் வழங்குவதுடன் மக்கள் தம் வாழ்வில் நிறைவினைப் பெறுவதற்கு ஒரு செயல் முறையான வழியையும் காண்பித்து வருகிறார். "நிறைவடைவதற்கான தேடுதல்" தான் இந்த வாழ்க்கைப் பயணத்தில் உன்னதமான ஒன்று என்பதை வெளிப்படுத்தும் அவரது உரையின் சில பகுதிகள் இங்கு இடம்பெற்றுள்ளது. "அமைதியின் சொற்கள்" பற்றிய அவரது வீடியோ நிகழ்ச்சிகள் ஒவ்வொரு பூரணை தினத்திலும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. இத் தொடரில் இன்றைய நிகழ்ச்சி காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது.**

இந்த வாழ்க்கை மிகவும் விசேடமான ஒரு பயணம். உண்மையான ஒரு நடனம். இதில் நீங்கள் உறங்கிவிடும் அளவுக்கு கவனக் குறைவாக இருக்கக் கூடாது. விழிப்புணர்வோடு இருக்க வேண்டிய பயணம் என்பதால் களைப்பாக இருக்கும்போது ஓய்வெடுத்து பின் தெளிவான எண்ணத்தோடும் நிதானத்தோடும் பயணத்தைத் தொடர வேண்டும். இந்தப் பயணத்தில் கூடுதலான சுமைகளைக் கொண்டு சென்றீர்களானால் மிகக் குறைவாகவே இன்புற முடியும்.

ஆகையால் முடிந்தவரை மிகக் குறைவாகவே கொண்டு செல்லுங்கள் உங்களுக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் தன்னிறைவைப் போன்ற அற்புதமான ஒன்று சாத்தியமாகக் கூடிய வாய்ப்பு தென்படும்போது நீங்கள் உங்கள் பயணத்தைச் சற்று நிறுத்தி உங்கள் வாழ்க்கையில் நடக்கும் பல விடயங்களை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். தன்னிறைவு என்பதன் விளக்கத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கவேண்டும். ஏனெனில் இந்தப் பயணம் மேற்கொள்வதின் அடிப்படையான குறிக்கோள் தன்னிறவைப் பெறுவது தான். நம்முன் ஆற்றல் வாய்ந்த சக்தி ஒன்று நம்மை தன்னிறைவு அடையத் தூண்டுகிறது. இது



காலம் காலமாக நடந்து கொண்டிருக்கிறது. புதிதான ஒன்றல்ல.

நம் வாழ்வின் ஒரு காலகட்டத்தில் நமக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளதென நாம் அறிந்திருக்கவில்லை. " இது தான் வாழ்க்கை. சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். நல்லதையும் கெட்டதையும் ஏற்றுக்கொள்ளுங்கள்" என எமக்கு சொல்லப்பட்டதை நாம் ஏற்றுக் கொண்டோம். இல்லை! இனி நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

நீங்கள் உங்கள் வாழ்க்கை யில் இருக்கும் அழகையும் ஆனந்தத்தை யும் கண்டுணரத் தேர்ந்தெடுக்கலாம். உங் கள் உள்ளிருக்கும் அழகுடனும் ஆனந்தத்துடனும் தொடர்புகொள்ளும் ஒவ்வொரு நாளும் சிறப்பான நாளாக இருக்கும். இந்த வாழ்க்கை ஒரு வரப்பிரசாதம் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

-மகராஜி

## ஆலய புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தம்பசிட்டி மாலந்தெணிப் பிள்ளையார் ஆலயத்தைச் சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஓ-52)

## கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

அருள்மிகு புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தின் மணிக்கூட்டு கோபுர கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியிலிருந்து 10 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் வந்து சிறப்பித்து சித்திவிநாயகர் அருளைப் பெற்றேகுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-35)

## ஆன்மீகச் சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்திநிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டு வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 'பெரியபுராணம்' என்ற தொடரில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் அவர்கள் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## சாரணர் தலைவர்களுக்கான பயிற்சி

(அல்வாய்)

பருத்தித்துறை மாவட்டத்திற்குட்பட்ட சாரண அணித் தலைவர்களுக்கான பயிற்சி மற்றும் குருளைச் சாரணத் தலைவர்களுக்கான பயிற்சி ஆகியன இன்று வெள்ளிக்கிழமை யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-19)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதந்தோறும் பூரணை தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி சிவ தொண்டன் நிலைய திருமுறை மண்டபத்தில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. (ஓ)

## நிறுவுனர் தின நிகழ்வு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் நிறுவுனர் தின நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை அதிபர் என். தெய்வேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பழைய மாணவரும், யாழ்ப்பாணம்,வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியுமான பி.சுவர்ணராஜ் நிறுவுனர் தின உரையை நிகழ்த்துவார். பழைய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வில் கடந்த (2007) வருடம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சையில் 3ஏ சித்திபெற்ற ஏழு மாணவர்களுக்கும் பழைய மாணவர் மன்றத்தின் கொழும்புக் கிளையினால் வழங் கப்பட்ட தங்கப்பதக்கங்களை நீதிபதி பி.சுவர்ணராஜ் அணிவித்து கௌரவிப்பார். (ஓ-35)

## வடமராட்சி வலய மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலய்ப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் வருமாறு,

**உதைபந்தாட்டம்**

*17வயதுக்குக் குறைந்தவர்கள்*

முதலாம் இடம்-தேவரையாளி இந்துக்கல்லூரி, இரண்டாம் இடம்-நெல்லியடி ம.ம.வி., மூன்றாம் இடம்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

*19வயதுக்குக் குறைந்தவர்கள்*

முதலாம் இடம்-தேவரையாளி இந்துக் கல்லூரி,இரண்டாம் இடம்-நெல்லியடி ம.ம.வி., மூன்றாம் இடம்-அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை.

**கரப்பந்தாட்டம்(பெண்கள்)**

*15 வயதுக்குட்பட்டவர்கள்*

முதலாம் இடம்-நெல்லியடி ம.ம.வித்தியாலயம், இரண்டாம் இடம்- வடமராட்சி ம.ம. கல்லூரி,மூன்றாம் இடம்- வட இந்து மகளிர்கல்லூரி.

*17 வயதுக்குட்பட்டோர்*

முதலாம் இடம்-மெதடிஸ்த பெ.உ.த.பாடசாலை,இரண்டாம் இடம்-நெல்லியடி ம.ம.வி., மூன்றாம் இடம்-விக்னேஸ்வராக் கல்லூரி.

*19வயதுக்குட்பட்டோர்*

முதலாம் இடம்-மெதடிஸ்த பெ.உ.த.பாடசாலை, இரண்டாம் இடம்-வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**கரப்பந்தாட்டம் (ஆண்கள்)**

*15வயதுக்குட்பட்டோர்*

முதலாம் இடம்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இரண்டாம் இடம்- வல்வை சிவகுரு வித்தியாலயம், மூன்றாம் இடம்-விக்னேஸ்வராக் கல்லூரி.

*17 வயதுக்குட்பட்டோர்*

முதலாம் இடம்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இரண்டாம் இடம்-இமையாணன் அ.மி.த.க.பாடசாலை,மூன்றாம் இடம்-தொண்டைமானாறு வீரகத்தி ம.வி.

*19வயதுக்குட்பட்டோர்*

முதலாம் இடம்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இரண்டாம் இடம்-விக்னேஸ்வராக் கல்லூரி, மூன்றாம் இடம்- சிதம்பராக் கல்லூரி.

இதில் முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர் என உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார். (ஓ)




யாழ்!செய்திகள்

## வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைத் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

குடும்பநல சேவை உத்தியோகத்தர் பகுதி II "ஆ" பிரிவினருக்கான செய்முறைப் பரீட்சை பின்வருமாறு மாற்றியமைக்கப்பட் டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

24ஆம்திகதி திங்கட்கிழமை - தெல்லிப்பளை, மானிப்பாய்,ஊர்காவற்றுறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச வைத்தியசாலை அளவெட்டியில் நடைபெறும்.

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை-கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கு பிரதேச வைத்தியசாலை, கோண்டாவிலிலும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் நடைபெறும்.

26ஆம் திகதி புதன்கிழமை-சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களுக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (ஓ)

## இளைஞர் குழு அட்டகாசம் கரவெட்டி மக்கள் விசனம்

கரவெட்டி கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் பகல் வேளைகளில் தடி, கொட்டன் என்பவற்றுடன் நாய்கள் சகிதம் பாடசாலை சீருடை அணிந்த மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர் குழு, முயல்வேட்டை என்ற சாட்டில் வீட்டுக் காணிகளின் வேலிகளை வெட்டி உள்ளே வந்து வீட்டில் உள்ள தேங்காய்கள் மற்றும் கண்ணுக்குத்தென்படும் சிறிய பொருட்களை களவாக எடுத்துச் செல்கின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவர்களது அத்துமீறலை ஆட்சேபிப்பவர்களை தகாத வார்த்தைகளால் ஏசிதாக்க வருகின்றனர் எனவும் இதனால் வீட்டில் உள்ளோர் குறிப்பாகப் பெண்கள் இவர்களது அட்டகாசத்தால் பயப் பீதியில் தினசரி காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் பூரணைவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பஜனை, விசேட ஆன்மீக உரை, அஷ்டோத்திர நாமார்ச்சனை, தீப ஆராதனை, பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.(அ-7)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (ஓ-7)

## யாழ்.ஆயரின் பரிசுத்த தின வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மரியன்னை பேராலயத்தில் இன்று பெரிய வெள்ளி சிலுவை தியான வழிபாடு காலை 6.30 மணிக்கும், பெரிய வெள்ளி ஆராதனை மாலை 4மணிக்கும்,பெரிய சனி ஏழு வார்த்தைகளின் தியானம் காலை 6.30 மணிக்கும்,புனித சனி திருவிழிப்பு சடங்கு மாலை 5.30 மணிக்கும், உயிர்ப்பு விழா திருப்பலி காலை 6.15 மணிக்கும் யாழ். ஆயர் அவர்களால் நடாத்தப்படும் என ஆயரின் செயலர் வண.பிதா.எஸ்.ஏ.றொசான் வலம்புரிக்கு தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதி விருது -2006

(யாழ்ப்பாணம்)

கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சும், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து 2006 ஆம் ஆண்டு நடாத்திய சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான ஜனாதிபதி விருதுக்கு யாழ்.மாவட்டத்திலிருந்தும், வடமாகாணத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார். (அ-7)

## விளையாட்டு விழா

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள் ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் K.W. விமலராஜன், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் S.துரைசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்விழாவில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பவற்றின் இறுதி ஆட்டங்களும், தடகள நிகழ்வுகளும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும் இடைவேளை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## தனியார் பஸ் சேவைக்கான தரிப்பிடம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இராஜவீதியூடாக யாழ்ப்பாணத்துக்கான தனியார் பஸ்சேவையில் இரண்டு பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அச்சுவேலி மினிபஸ் சங்கத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட சங்கப் பிரதிநிதியால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவ் வீதியில் பஸ்கள் தரித்து நிற்பதற்குரிய தரிப்பிட வசதியினை ஏற்படுத்தித் தருமாறும் அவர்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-134)





பருத்தித்துறை புனித நகரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கான மின்சார இணைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.அரச அதிபர் க.கணேஷினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இம் மின்னிணைப்புக்கள் சேவைக் கட்டணங்களின்றி இலவசமாக இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விவில் அரச அதிபர் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மின்னிணைப்பை அரச அதிபர் ஆரம்பித்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் கிராமச்சங்கத் தலைவர் உரையாற்றுவதை மற்றைய படத்திலும் காணலாம்.

# ...ங்கரத்தை பிட்டியம்பதி
# ...சமேத வீரபத்திர சுவாமி ஆலய
# ...பிதழ் - 21.03.2008





## ஆலய குருவின் ஆசிச் செய்தி



வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பிட்டியம் பதியிலே வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டியனவற்றை வாரி வழங்கிக் கொண்டு அருளாட்சி புரியும் பத்திரகாளி சமேத வீரபத்திர பெருமானின் இரதோற்சவத்தின் தினம் இன்றாகும். இந் நன்நாளில் இந்த ஊர் மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் அன்னையின் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றேன்.

ஓம் சாந்தி

சிவானந்தம் நிரஞ்சன் ஐயர்
ஆலய குரு
பத்திரகாளி கோவில் சங்கரத்தை.

மலர் அமைப்பு:- வி.கோபிகிருஷ்ணா

சிறு குடில் அமைத்து வழிபடத்தொடங்கிய இவ்வாலயம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கற்பக்கிரகமும் பிள்ளையார், வைரவர் என்னும் பரிபாரத்தெய்வங்களுக்கும் மண்டபங்கள் அமைக்கப்பெற்று கற்கோயிலாக மாறியது. மூலஸ்தானத்தில் பிரதிட்ஷை செய்யப்பட்டுள்ள விக்கிரகங்கள் அக்காலத்தைச் சேர்ந்தவை. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொடியேற்றத்துடன் தொடங்கி 10ஆவது நாளான பங்குனி மாத உத்திர நட்சத்திரத்தில் தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. இன்று எழுந்தருளி விக்கிரகங்களாக உள்ள அம்மையப்பர் விக்கிரகங்கள் 1880ஆம் ஆண்டு அப்போதைய ஆலய அறங்காவலரான வீரபத்திரர் கதிரவேல் என்பவரினால் அமைக்கப்பட்டன.

1947ஆம் ஆண்டு ஆலய அறங்காவலர்களும் ஊர் மக்களில் சிலருமாக சேர்ந்து உயிர்ப் பலி கொடுப்பதை நிறுத்தினார்கள். இதே ஆண்டு நந்தி தேவர் பிரதிட்ஷை செய்யப்பட்டார். உயிர்ப்பலி கொடுப்பது திராவிட பூசை முறையை ஓர் அங்கமாக விளங்கியதால் இன்றும் பூசைகள் நடைபெறும் போதும் பலி கொடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் யாவற்றிலுமே நீத்துக்காய் வெட்டி பலி கொடுக்கப்படுகின்றது. ஆனாலும் இன்றும் பக்தர்கள் நமது நேர்த்திக்காக சேவல்களையும் கடாக்களையும் கோவிலுக்குக் காணிக்கையாக செலுத்துவதை வழமையாகக் கொண்டுள்ளனர். இவ்வாண்டிலேயே கோவில் ஆகமவிதிகளிற்கு அமைவாக அமைக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு சித்திரத் தேர்கள் செய்து வெள்ளோட்டம் நடைபெற்றது. 1985ஆம் ஆண்டு திருத்த வேலைகள் நடைபெற்று வைகாசி பூனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1988ஆம் ஆண்டு நவக்கிரக மண்டபமும் 1989ஆம் ஆண்டு சண்டேஸ்வர மண்டபமும் அமைக்கப்பட்டன. 1987ஆம் ஆண்டு மணிக்கூட்டுக்கோபுரமும் 1995ஆம் ஆண்டு வீரபத்திர மண்டபமும் திருத்தி அமைக்கப்பட்டன. 2001ஆம் ஆண்டு புனருத்தாரன வேலைகள் நடைபெற்று ஆவணி ரோகினி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2002ஆம் ஆண்டு வசந்தமண்டபம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2003ஆம் ஆண்டு மாசி மாதம் தெற்குப்புறத்தில் மூன்று தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2007ஆம் ஆண்டு சித்திரை மாதம் கிழக்குப் புறத்தில் 5 தளத்தில் மகாராஜ கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது அம்பாளிற்கு மேற்குப்புறத்தில் 3 தள இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆலய அறங்காவலர்.

## அற்புதம் நிகழ்த்தும் தாயே பத்திரகாளி!

உலகம், உயிர், இறைவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவியுள்ள ஆற்றலே பராசக்தியாகும். அந்த சக்தி தேவியே எல்லாம் வல்லவள். எங்கும் எதிலும் நிறைந்தவள். அவள்வெவ்வேறு தொழில்களில் வெவ்வேறு வடிவங்கள் எடுக்கிறாள் .அந்த வடிவங்களிலே ஒன்றுதான் பத்திரகாளி வடிவம். சங்கரத்தை மக்களின் நெஞ்சத்தில் நிறைந்திருப்பவள். இந்தப் பத்திரகாளியே வயல் வெளியில், வெட்டவெளிச்சமாய் நின்று காத்து வருபவள் ஆச்சிபத்திரகாளியே. 'ஆச்சி கைவிட மாட்டாள்' என்பது அவ் வூர் மக்களினதும் அயற்கிராம மக்களினதும் நிறைந்த நம்பிக்கையாகும்.

தேரேறி வருகின்ற அந்தக் கண் கொள்ளாக் காட்சியைக்காண பிற வூர்களில் இருந்தும், பிறநாடுகளில் இருந்தும் வருகை தருவார்கள் பக்தர்கள். அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திய கதைகள் இன்றும் கிராம மக்கள் நினைவு கூருகின்றனர் தாயே! பத்திரகாளி அம்மா! வேண்டுகின் றோம் நின் பாதங்களை. அன்பும் அறமும் இந்த மண்ணிலே பொழிய தேரேறிவா அம்மா! துன்பமும் துயரமும் எம்மைவிட்டு நீங்கி ஓட அருள் புரிதாயே!

நின்றிடும் தாயே நித்தமும் போற்றி
இன்பங் கேட்டேன் ஈவாய் போற்றி
துன்பம் வேண்டேன் துடைப்பாய் போற்றி
அமுதம் கேட்டேன் அளிப்பாய் போற்றி

என அந்தக் கவிஞன் கேட்டதை தேரேறி வந்து நிறைவேற்று அம்மா! பணிந்தோம் உன்தாள்களை.

அ.குமாரவேலு
விரிவுரையாளர்.
யாழ்ப்பாணக்கல்லூரி.

## அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

பாலிற் செறிந்த பிட்டியம் பதியில் கோயில் கொண்டு வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈர்ந்துஅருள் பாலித்து வரும் பத்திரகாளி அம்மை இன்று தேரில் பவனி வரவுள்ளார். இந்த நன்னாளில் சங்கரத்தை வாழ் சைவ மக்கள் சார்பில் எல்லோரும் எல்லாமும் பெறவும் சாந்தியும் சமாதானமும் நிலவும் இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்!

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

இந்து வாலிபர் சங்கம்,
சங்கரத்தை.


...நாடு
...மாகவும் ...ாள்ளவும் ...ஜூப்பைப் ...லா முதல் ...ந்திரத்தில் ...ற்றவும் ...டம்
...ஆலை

சிவகணேசன் ரெக்ஸ்ரையில்ஸ்
யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் மனம் கவர் மாளிகை
சிவகணேசன் ரெக்ஸ்ரையில்ஸ்
இல:41 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/888)

பலசரக்குப் பொருட்கள் , பால்மாவகைகள், மற்றும் பிஸ்கற் வகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஸ்ரீ முருகன் களஞ்சியம்
மூளாய் வீதி ,வட்டுக்கோட்டை.
தொ.பே.021 222 5459 (சி/921)

...ன் ஸ்ரோர்ஸ்
...ன Shell Gas Agent, கட்டடப் பொருட்...
...க்குப் பொருட்கள், பால்மா வகைகள்,
...ங்கள் மற்றும் அபிஷேகப் பொருட்கள்
...மொத்தமாகவும் சில்லறையாகவும்
...ள்ள நாடவேண்டிய ஒரே இடம்
...ஸ்ரோர்ஸ் (பேபி கடை)
...சன் வீதி, வட்டுக்கோட்டை.

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்
Sri Ianka Insurance Corporation ltd

மூன்றாம் நபர் காப்புறுதி (வாகனகாப்புறுதி) உட்பட அனைத்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன தேவைகளையும் உங்கள் இல்லங்களில் நிறைவேற்றித்தர உடன் அழையுங்கள் .
நீங்கள் அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
வலிகாமம்பிரதேசம்: 0777 563781, 077 4113984, 077 3223038
வடமராட்சி பிரதேசம்: 0777 563781 ,0776153548
தென்மராட்சி பிரதேசம்: 0777 563781
யாழ்ப்பாணபிரதேசம்:0777 563781,0774113984
தீவகப் பிரதேசம்: 0777 563781
யாழ். மாவட்டம் முழுவதும்:- 0777563781

மைக்ரோ ரவர் கொம்பியூட்டர் பிறிண்டிங் அன் மியூசிக் சென்ரர்
ஓவ்செற் பிறிண்டிங் கறுப்பு, வெள்ளை, கலர் பிறிண்டிங் போட்டோ பிரதி, லெமினேற்றிங், (கவரிடுதல்) டிஜிற்றல் பிறிண்டிங், பிறேமிங் வீடியோ, ஒடியோ ரெக்கோடிங் அன் வீடியோ, மிக்சிங் எடிட்டிங் என்பவற்றை குறித்த நேரத்தில் உடனுக்குடன் செய்து பெற்றக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.
மைக்ரோ ரவர் கொம்பியூட்டர் பிறிண்டிங் அன் மியூசிக் சென்ரர்
(சி/904) தெல்லிப்பளைவீதி. வட்டுக்கோட்டை

சுதா பந்தல் சேவை
மங்கள வைபவங்களிற்கான, சொக்கட்டான் , வில்லுப் பந்தல்களையும், பந்தல்கள், கதிரைகள் வைபவங்களிற்கான ஒளியமைப்புக்களைப் பெற்றிடவும் நீங்கள் நாடவேண்டிய இடம்
சுதா பந்தல் சேவை
காளிகோவிலடி, வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை.
(சி/896) உரிமையாளர் : எஸ்.சுதாகரன்

ஈசன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்
வீடியோகசற், சீடி, டீவீடி போன்றவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும் தரமான ஓடியோ, வீடியோ ரெக்கோடிங்குகளை குறித்த நேரத்தில் உடனுக்குடன் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
ஈசன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்
மாவடி (அடைக்கலம் தோட்டம் முருகன் ஆலயம் பின்புறம்) வட்டுக்கோட்டை (சி/903)

ஸ்ரீராஜ் தொலைத் தொடர்பகம்
உள்ளூர், வெளியூர் தொலைபேசி அழைப்புக்களையும் போட்டோ பிரதி, பக்ஸ், இன்ரநெற் வசதிகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
ஸ்ரீராஜ் தொலைத் தொடர்பகம்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
(சி/897) உரிமையாளர் கே. குலநாதன்

ரூபன் சிகையலங்கார நிலையம்
நீங்கள் விரும்பிய முறையில் சிகையலங்காரம் செய்திட நாட வேண்டிய ஒரே இடம்
ரூபன் சிகையலங்கார நிலையம்
யாழ்ப்பாண கல்லூரிக்கு அருகாமையில், வட்டுக்கோட்டை.
(சி/902)

சண்முகம் களஞ்சியம்
பலசரக்குப் பொருட்கள் மற்றும் மானிப்பாய் தினேஷ் வெதுப்பக உற்பத்திப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய இடம்.
சண்முகம் களஞ்சியம்
சங்கரத்தைச்சந்தி, வட்டுக்கோட்டை.
(சி/898) உரிமையாளர் திரு.சு.சண்முகராசா.

யோகாஸ் ரெக்ஸ்ரையில்ஸ்
யாழ். நகரில் ஆடவர், நங்கையர் மனம் கவர் ஜவுளிகளை மலிவு விலையில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
யோகாஸ் ரெக்ஸ்ரையில்ஸ்
18A நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5679 (சி/901)

பார்த்தீபன் உணவகம்
சகல விதமான உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என்பவற்றைச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
பார்த்தீபன் உணவகம்
தபாற்கந்தோர் அருகில், பிராதன் வீதி, வட்டுக்கோட்டை.
(சி/899)

யோகாஸ் தொலைத் தொடர்பகம்
உள்ளூர், வெளியூர் தொலைபேசி அழைப் புக்களையும் பக்ஸ், போட்டோ பிரதி, கவரிடுதல், இன்ரநெற் அழைப்புக்களையும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய இடம்.
யோகாஸ் தொலைத் தொடர்பகம்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே. 021 222 5536, 021 222 9749 (சி/900)

# இலங்கை - ஹயானா அணிகள் மோதிய பயிற்சி ஆட்டம் சமனிலையில் முடிவு

(ஹயானா)

இலங்கை அணிக்கும் ஹயானா கிரிக்கெற் சபை தலைவர் அணிக்குமிடையிலான மூன்று நாள் பயிற்சியாட்டம் சமநிலையில் முடிபுற்றது.

மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இத் தொடருக்கு முன்னதான மூன்று நாள் பயிற்சியாட்டம் கடந்த 17ஆம் திகதி முதல் ஹயானா கிரிக்கெற் சபைத் தலைவர் அணியுடன் இலங்கை அணி மோதியது.

இப் போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெற்றுக்களை மாத்திர மிழந்து 492 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வர்ண புர 132 ஓட்டங்களுடன் இடைவிலகினார். ஆட்டமிழக்காமல் டில்சான் 101 ஓட்டங்களையும் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தனா 99 ஓட்டங்களையும் மற்றும் ஆட்டமிழக்காமல் சாமர சில்வா 51 ஓட்டங்களையுமெடுத்தனர்.



பந்து வீச்சில் பிஷ்சோ, ஜேக் கொப்ஸ் மற்றும் புரோக்ஸ்ஆகியோர் தலா ஒரு விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஹயானா கிரிக்கெற் சபைத்தலைவர் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 248 ஓட் டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெற் றுக்களையுமிழந்தது.

இதில் புரோக்ஸ் 68 ஓட்டங்களையும் ஹயன்ஸ் 61 ஓட்டங்களையும் மற்றும் பிரேவுன் வெல் 44 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் சுழல் பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் 5 விக்கெற்றுக்களையும் மிரான்டோ 2 விக்கெற்றுக்களையும் மற்றும் குலசேகரா, முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸில் 244 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற இலங்கை அணி மூன்றாவது இறுதி நாளான நேற்று முன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி ஆட்டநேர முடிவில் 6 விக்கெற்றுக்களையிழந்து 177 ஓட்டங்களையெடுத்திருந்தது.

இதில் வர்ணபுர 50 ஓட்டங்களுடன் இடைவிலகினார். மற்றும் மஹேல ஜெயவர்தனா 40, சங்கக்கார 36 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் பிஷ்சோ 3 விக்கெற்றுக்களையும் டவஸ் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தின் 3 நாட்களும் நிறைவடைந்தமையால் சமநிலையில் முடிபுற்றது. (5)

# எனது விருப்பப்படி இந்திய அணியுள்ளது

## என்கிறார் தோனி

(புதுடில்லி)

அவுஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புத் தொடரில் மூத்த வீரர்களான கங்குலி, டிராவிட் அதிரடியாக நீக்கப்பட்டனர். இளம் வீரர்களுக்காக மூத்த வீரர்கள் நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அணித்தலைவர் தோனி தான் இருவரின் நீக்கத்துக்கு பின்னணியில் இருந்ததாக கூறப்பட்டது. இதனால் இது குறித்து விமர்சிக்கப்பட்டது.

ஆனால் இளம் வீரர்கள் கொண்ட இந்திய அணி சம்பியன் பட்டம் பெற்று புதிய வரலாறு படைத்தது. இந் நிலையில் மூத்த வீரர்கள் நீக்கப்பட்டதை தோனி நியாயப்படுத்தியுள்ளார். ஒருநாள் போட்டி அணித்தலைவரானள அவர் "கிரிக் இன்போ" இணையத் தளத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

எனது விருப்பப்படி இந்திய அணி உள்ளது. எனது சிந்தனைப்படி தேர்வாளர் களை தேர்வு செய்தனர். இளம் வீரர்கள் சிறப் பாக ஆடினார்கள். அணி வீரர்கள் தேர்வு தொடர்பாக எழுந்த விமர்சனத்துக்கு பதில், சொல்வது இதுவே தகுந்த நேரம் சில விடயங்கள் நாடுமுழுவதும் தெரிய வேண்டியது மிகவும்முக்கியமான தாகும். அவுஸ் திரேலியாவில் நாங்கள் சிறப்பாக ஆடாவிட்டால் கேள்விகளால் எங்களை துளைத்து இருப்பார்கள்.



அணியை வைத்துத்தான் விமர்சனம் இருக்கவேண்டும். தனிப்பட்டவர்கள் பற்றி கூறக்கூடாது. இவ்வாறு தோனி கூறியுள்ளார். (5)

# லாங்வேல்ட் நீக்கம்

(ஜோஹானஸ்பேர்க்)

இந்தியாவில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ள தென்னாபிரிக்க அணியில் வேகப்பந்து வீச்சாளர் லாங்வேல்ட் நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் விளையாட உள்ள 14 பேர் கொண்ட தென்னாபிரிக்க வீரர்களின் பட்டியலில் நட்சத்திர வீரர் ஆண்ரு நெல் இடம்பெறவில்லை. இதனால் தேர்வாளர்கள் மீது அதிருப்தியை வெளியிட்ட லாங்வேல்ட் அணியிலிருந்து தானும் விலகுவதாக விருப்பம் தெரிவித்தார்.

இதையடுத்து தென்னாபிரிக்க கிரிக்கெற் சபை நீண்ட ஆலோசனைக்குப் பிறகு அவரை அணியிலிருந்து நீக்கியது.

அவருக்குப் பதிலாக யாரை சேர்ப்பது என்பது குறித்து சபை ஆலோசனை மேற்கொண்டுள்ளது. (5)

# இலங்கை அணி சம்மதம் தெரிவிப்பு

(கராச்சி)

பாதுகாப்பு காரணங்களால் பாகிஸ்தான் பயணத்தை அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி தற்காலிகமாக ரத்து செய்துள்ளதால் ஏமாற்ற மடைந்த பாகிஸ்தான் ரசிகர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் இலங்கை அணி பாகிஸ் தானில் ஒருநாள் போட்டிகளில் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெற் சபையின் அட்டவணையில் இப்போட்டி இடம்பெற வில்லையென்றாலும், திடீரென ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதால் ஐசிசி.யின் அனுமதி அளிக் கும் எனத் தெரிகிறது. அதே போல் பங்களா தேஷ் அணியும், 5 ஒரு தினப் போட்டிகள் மற்றும் ஒரு 'இருபது-20' போட்டியில் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளது.

முல்தான் ஃபைசலாபாத், கராச்சி, லாகூர் ஆகிய இடங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளது. (5)

# ஐ.பி.எல் ஐதராபாத் அணிக்கு கில்கிறிஸ்ட் துணைத்தலைவர்

(ஐதராபாத்)

ஐ.பி.எல்.ஐதராபாத் அணிக்கு துணைத் தலைவராக அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட் அறிவிக்கப்பட்டுள்ளார். அணிக்கு 'ஐதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஐ.பி.எல். அமைப்பின் சார்பில் நடத்தப்பட்டவுள்ள இருபது-20 போட்டிகள் ஏப்ரல் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



இதற்காக ஒவ்வொரு அணியும் தயாராகி வருகின்றன. டெக்கான் குரானிக்கிள் நிறுவனத்தால் வாங்கப்பட்ட ஐதராபாத் அணிக்கு இந்திய வீரர் வி.வி.எஸ்.லட்சுமண் தலைவராக ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டிருந்தார். தற்போது துணைத் தலைவராக சமீபத்தில் ஓய்வு பெற்ற அவுஸ்திரேலிய விக்கெற் காப்பாளரும் அதிரடி துடுப்பாட்ட வீரருமான கில்கிறிஸ்ட் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஐதராபாத்தில் நடந்த விழாவில் அணிக்கு புதிய பெயரும், சின்னமும் அறிமுகப்படுத்தப்பட்டது. டெக்கான் குரானிக்கிள் நிறுவனத்தை நினைவூட்டும் வண்ணம், 'டெக்கான் சார்ஜர்ஸ்' (டி.சி) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'மோதலுக்கு தயாராகும் காளையின்' உருவம் அணியின் சின்னமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. (5)

# ஐ.சி.சி. விதிகளுக்கு பயந்து ஆக்ரோஷத்தை கைவிட்டேன்

(புதுடில்லி)

ஆக்ரோஷத்துக்கு பேர் போன இந்திய வீரர் சிறிசாந்த் தன் மீது தடை விதிக்கப்படும் என்ற பயத்தால் முத்தரப்பு தொடரில் சாந்தமாக விளையாடிய்தாக கூறியுள்ளார்.



கேரளாவைச் சேர்ந்த இந்திய வீரர் ஸ்ரீசாந்த் தன்னுடைய ஆக்ரோஷத்தால் புகழ் பெற்றவர். போட்டிகளின் போது மைதானத்தில் கூச்சலிடுவது, நடனமாடுவது, குதிப்பது போன்ற இவரது செய்கைககள் சில சமயங்களில் சர்ச்சைகளை உண்டாக்கியுள் ளன. ஆனால் சமீபத்திய அவுஸ்திரேலிய முத்தரப்பு தொடரில் வழக்கத்துக்கு மாறாக இவர் அமைதி காத்தார். இதனால் பெரிதும் பாராட்டப்பட்டார். தன்னுடைய ஆக்ரோ ஷத்தை குறைத்துக்கொண்டதன் ரகசியத்தை வெளியிட்டுள்ள ஸ்ரீசாந்த் கூறியதாவது, ஆயுர்வேத சிகிச்சையும், யோகாவும் அமைதியாக இருப்பதற்கு உதவின.

அது மட்டுமில்லாமல் ஐ.சி.சி.விதிகளை மீறி நடந்தால் குறைந்த பட்சம் மூன்று போட்டிகளில் விளையாட எனக்கு தடைவிதிக்கப் படலாம் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அமைதியாக இருந்தேன். இது தான் பெயருக்கேற்றபடி என்னை சாந்தமாக இருக்க வைத்தது. ஆக்ரோஷத்துக்கும் முட்டாள் தனத்துக்கும் இடையே மெலிதான இடைவெளி தான் இருக்கிறது என்பதை உணர்ந்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி சாந்தமாக இருந்தேன். நான் இப்போது மிகவும் பக்குவப்பட்ட கிரிக்கெற் வீரர்.

அவுஸ்திரேலியாவில் நான் மிகச் சிறப்பாக விளையாடவில்லை என்பது உண்மை தான். தோள்பட்டை காயத்திலிருந்து மீண்டு வந்து அதிக நாள் பயிற்சியில் ஈடுபட முடியாத நிலையில் இருந்தேன். வரவிருக்கும் தென்னாபிரிக்க தொடரில் சிறப்பாக விளையாடுவேன். ஒரு தனியார் நிறுவன நிகழ்ச்சிக்காக பாலிவூட் நடிகை பிரியங்காசோப்ராவை புகழ்ந்து பேசினேன். அது ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி அவ்வளவுதான். எந்த நடிகையின் பின்னாலும் சுற்ற வேண்டிய தேவை எனக்கு இல்லை இவ்வாறு சிறிசாந்த் கூறினார். (5)

# 2011-ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெற்றில் 14 அணிகள் மட்டுமே போட்டியிடும்

(டுபாய்)

இந்தியா, பாகிஸ்தான் , இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து கூட்டாக நடத்தவுள்ள 2011 உலகக் கோப்பை கிரிக்கெற் போட்டியில் மொத்தம் 14 அணி கள் மட்டுமே போட்டியிடும் என்று சர்வதேச கிரிக்கெற்சபை (ஐசிசி) அறிவித்துள்ளது.

டுபாயில் நடந்த 2 நாள் ஐசிசி நிர்வாகக் குழு கூட்டத்தில் இதற்கான முடிபு எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு மேற்கிந்திய தீவுகளில் நடந்த உலகக் கோப்பை போட்டியில் 16 அணிகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களாக,

* இங்கிலாந்து த தென்னாபிரிக்க அணிகளிடையே நடக்கவுள்ள டெஸ்ட் தொடரில் களத்தில் இருக்கும் நடுவர்களின் முடிபு தவறு எனக் கருதினால் துடுப்பாட்ட வீரர் மற்றும் களத்தடுப்பில் உள்ள அணியின் தலைவர் 3 ஆவது நடுவரிடம் மேல்முறையீடு செய்யும் உரிமை வழங்கப்படுகிறது.

* பாகிஸ்தானில் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள மினி உலகக் கோப்பை கிரிக்கெற் தொடரில் மாற்றம் இல்லை.

* இந்திய பிரிமியர் லீக் (ஐபிஎல்) போட்டிக்கு முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. கிரிக்கெற் சபையின் அனுமதி பெறாமல் நடத்தப்படும் ஐசிஎல் போட்டிக்கு அங்கீகாரம் இல்லை.

## ஐ.சி.சி. அறிவிப்பு

### மீண்டும் காலிறுதி

எதிர்வரும் 2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடர் மீண்டும் காலிறுதி சுற்றுமுறை கொண்டு வரப்படுகிறது. இந்தப் போட்டியில் மொத்தம் 14 அணிகள் பங்கேற்கின்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்படுகிறது. லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தலா 4 அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். 1996ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டிக்கு பிறகு, காலிறுதிக்கு பதிலாக சூப்பர் சிக்ஸ், சூப்பர்-8 சுற்றுகள் அறிமுகம்செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (5)

கோழைகள் சுடக் கூட்பாகக் கூடிவிட்டால் பலமான பேசுவார்கள்.

–குமேனியா

# வலம்புரி

## தேர்தல்களால் பிரச்சினை தீருமா?

'கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தி முடித்தாயிற்று. தொடர்ந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்து கொண்டிருக்கின்றன.

வடக்கிலும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசின் இந்தப் போக்கைப் பார்க்கும்போது தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறாத காரணத்தினாலேயே இனப்பிரச்சினை தீவிரமடைந்ததுபோலவும், எனவே தேர்தலை நடத்திவிட்டால் ஜனநாயகம் செழித்து எங்கும் அமைதியும் சமாதானமும் நிலவும் என அரசு எண்ணுகின்றது.

ஜனநாயகம் என்பது தேர்தலால் வருவதல்ல. அது மக்களின் சுதந்திரம், உரிமை, சிறுபான்மையின மக்கள் தொடர்பில் அந்த நாடு கொண்டுள்ள கொள்கைகள், கோட்பாடுகள் என பல விடயங்கள் அடங்குகின்றன.

அடிப்படை மனித உரிமைகள்கூட பாதுகாக்கப்படாத நாட்டில், தேர்தல்கள் கூட ஜனநாயகப் பண்புடன் இடம்பெறாது என்பது தெட்டத்தெளிவு.

ஜனநாயக ஆட்சியைத் தெரிவு செய்கின்ற தேர்தலில் மோசடிகளும் ஊழல்களும் நடக்குமாயின் அங்கு ஜனநாயகம் பெயரளவில்–யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்களால் மட்டும் உச்சாடனம் செய்யப்படும் ஓர் சொல்லாகவே இருக்கும்.

அந்த இயல்பை நாம் இலங்கையில் தாராளமாகக் காண்கின்றோம். ஜனநாயகம் என்பது உள்நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களையும் அடக்கு முறைகளையும் வெளியுலகுக்கு மறைக்கும் போர்வையல்ல.

எனினும் ஜனநாயகப் போர்வையால் அநீதிகளை மூடி மறைக்கச் சிலர் முற்படுவது அவர்களின் அறியாண்மையை, வெளிப்படுத்துவதாகும்.

இந்த அடிப்படையிலேயே தேர்தல் நடத்தும் திருவிழாவில் அரசு ஈடுபட்டுள்ளது. மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில், அதற்கு மேலாக தேர்தலில் வெற்றியீட்டியவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் வேறு.

இப்படியே பாதுகாப்புப் படைகளின் உதவியுடன் நடமாடும் ஜனநாயகத்தால் எதனையும் சாதிக்க முடியாது என்ற உண்மையை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை உருவாக்குவதே ஜனநாயகத்தின் அடிப்படைக் கருமம். தேர்தல் நடத்திவிட்டோம் – மக்கள் வாக்களித்து விட்டார்கள் – ஜனநாயகம் கட்டிக் காக்கப்படுகின்றது என்ற வாதங்கள் எல்லாம் பேச்சுக்கானதேயன்றி அவை நடைமுறையில் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவையல்ல.

எனவே முதலில் சமாதான சூழ்நிலைக்கான வேலைத் திட்டங்களை அரசு மேற்கொள்ள வேண்டும். அதனூடாக நிரந்தரமான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்தி அதன் பின்னர் தேர்தல்களை நடத்துவதே சாலப் பொருத்துடையதாகும்.

# சட்டவிரோத ஆயுதங்கள் மூலம் எட்டு விநாடிக்கு ஒரு குற்றச்செயல்

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் குற்றச்செயல்கள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது. சட்டவிரோத ஆயுதங்கள் மூலமாக இலங்கையில் எட்டு விநாடிகளுக்கு ஒரு பாரதூரமான குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன என்று தெற்காசியாவிற்குள் சட்டவிரோதமான ஆயுதங்களின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வலையமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் குற்றச்செயலை செய்வதற்கு மக்கள் தயக்கம் காட்டினர் எனினும் இன்று வலுவான சட்டங்கள் இருக்கின்றபோதிலும் சிறு வயதிலேயே குற்றச் செயல்களை அச்சமின்றி செய்கின்றனர் என்று தெற்காசியாவிற்குள் சட்டவிரோதமான ஆயுதங்கள் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வலையமைப்பின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பிரிவின் பொறுப்பாளர் தொடங்வத்தை தெரிவித்தார். வலையமைப்பின் இலங்கைக்கான பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற் கண்ட தகவலை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

சிறு ஆயுதங்கள் மூலமாக ஏற்படுத்தும் ஆபத்து மற்றும் அதனை பயன்படுத்துவதனால் வழங்கப்படுகின்ற தண்டனை தொடர்பான சட்டத்தை மக்கள் தெரிந்து வைத்திருக்கவில்லை. ஆயுதங்கள் தொடர்பான அறிவு அல்லது நிபுணத்துவம் பெற்றவர்களால் இந்த சட்டவிரோதமான ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும் பாரதூரமான குற்றச்செயல்களை முன்னெடுப்பதற்கே இவ்வாறான ஆயதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை பொலிஸ் அறிக்கையின் பிரகாரம் எட்டு விநாடிகளுக்கு ஒரு பாரதூரமான குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன. இவற்றிற்கு சட்டவிரோதமான ஆயுதங்களே காரணமாகும். மனிதப் படுகொலைகளில் மூன்றில் ஒன்றும், பாரதூரமான கொள்ளைகளில் மூன்றில் ஒன்றும் சட்டவிரோதமான ஆயுதங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இது தேசிய அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலான நடவடிக்கையாகும். தொழி லின்மை, ஏழ்மை, கருத்து முரண்பாடு, இழிவு படுத்தல் போன்றவற்றின் காரணமாகவே இவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன. (அ–5)

# அவமானச் சிலுவை புனித சின்னமான மீட்பின் நாள்

இயேசு எமக்காக தன்னுயிரையே கல்வாரி உச்சியிலே அர்ப்பணித்தார். மோயீசன் பாலைநிலத்தில் பாம்பை உயர்த்தியது போன்று மனுமகனும் உயர்த்தப்படவேண்டும் என்னும் முன்னறிவிப்பின்படி மூன்று



ஆணிகளில் மும்மணி நேரம் சிலுவையில் தொங்கி வானகத் தந்தைக்குத் தம்மை பலியாக்கிய தியாகத்தின் நாளே புனித வெள்ளியாகும்.

நாம் தலை நிமிர்ந்து இறையரசின் பங்காளராக வேண்டும் என்பதற்காக தம் திருத் தலை கவிழ்ந்து இயேசு மரணித்த தூய நாள் இது. அவமானத்தின் சின்னமான சிலுவை எமது பாஸ்கா செம்மறியான கிறிஸ்து அதன் மேல் பலியிடப்பட்டமையால் புனித சின்னமாகப் போற்றி வணங்கத் தொடங்கிய மகிமையின் நாள் இது. எல்லோரின் பாவங்களையும் தோள் மீது ஏற்று பொல்லாதோர் வன்செயலை பொறுமையோடு மன்னித்து சொல்லரிய தம்முயிரை தற்கொடையாய் உவந்து கல்வாரி குருசினிலே அன்புக்காவியம் படைத்தார் யேசு.

முப்பது காசுக்காக மாசற்ற இரத்தத்தை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்தான் யூதாஸ். இன்று தப்பேதும் செய்யாதோரை சுயநலத்தால் திட்டமிட் டுக் காட்டிக் கொடுக்கும் நவீன யூதாசுகள் இல்லையா? பிலாத்து கைகழுவி மரணத்தீர்ப்பிட்டு யூதாசிடம் ஒப்படைத் தான் இயேசுவை. இன்று அவனுக்கு அப்படித் தான் நேரவேண்டும்... இவருக்கு இதுவும் போதாது... நீதான் குற்றவாளி... என்று தீர்ப்பிடும் பிலாத்துக்கள் நம்மிடையே இல்லையா? தமது பாவச் சிலுவையை பாரச் சிலுவையாக்கி இயேசுவின் தோள் மீது சுமத்தினர். இன்று எமது குறைகளை, குறைபாடுகளை, தவறுகளை பிறர் மீது சுமத்தும் மனிதர்கள் எத்தனை பேர்?

அன்று மீட்பரை 'சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும்' என்று கூக்குரலிட்டனர். இன்று அநீதியை, ஆக்கிரமிப்பை, பசுமையை எதிர்த்து கோஷங்கள் எழுப்பப் படவில்லையா? சாட்டையால் அடித்து முள் முடியை தலையில் அழுத்தினர். இன்று எமது சொல் செயலால் பிறரது வாழ்வில் அடித்து மன அழுத்தங்களை உருவாக்கவில்லையா? இறைமகனின் ஆடைகளைக் களைந்து அவமானப்படுத்தினர். பெண் இனத்தை இம்சைப்படுத்தி, அயலாரை வசைபடி அவமானப்படுத்தும் நிலைகள் இன்று இல்லையா? மூவுலகாளும் இறையரசரை மூன்று ஆணிகளால் அறைந்தனர். இன்று

## இன்று புனித வெள்ளி

முழு உலகிலும் குண்டுகள் பொழிந்து, மனித உயிர்கள் அழிக்கப்படுகின்றன. 'தாக மாய் இருக்கின்றேன்' என்ற போது இயேசுவுக்கு புளித்த காடியைக் கொடுத்தார்கள். இன்று ஒரு வேளை கஞ்சிக்கு ஒரு சாரார் அலைய மூக்கு முட்ட மது அருந்தி சமூ கத்தை சீரழிப்போர் எம்மில் ஏராளம். இறந்த பின்னும் விலாவினைக் குத்தித் திறந்தனர். இன்று ஒருவர் மறைந்த பின்பு அவரது பழைய வாழ்வைக் குத்தித் திறந்து தூற்றும் வாய்கள் எத்தனை?

இச் செயற்பாடுகளனைத்தும் இயேசுவின் அவமானப்பாடுகளையும் சிலுவையின் கனத்தினையும் மரணத்தின் கொடுமையினையும் மென்மேலும் அதிகரிப்பதாகவே அமையும். மாறாகக் கல்வாரிப்பயணத்தில் தடம் பதித்த நற்செயல்களை எமது வாழ்வில் முன்னெடுத்துச் செயலாற்றுவோம். கைது செய்ய வந்தவரின் காது வெட்டப்பட்டபோது அதை மீண்டும் இயேசு பொருத்தியது–பகைவனிடத்திலும் அன்பு காட்டும் செயல். சீரோன் சீமோன் சிலுவை சுமக்க உதவியது–பிறர் சுமையில் துன்பத்தில் பங்கு கொள்வதாகும். ஜெருசலேம் மகளிருக்கு ஆறுதல் கூறியது. பிறர் துயரை புரிந்து தோற்றிடும் பண்பாகிறது. திருமுகத்தைத்துடைத்த போது துணியில்



திருமுகம் பதிந்தது. செய் நன்றிக்கு பிரதி உபகாரம் செய்தலாகும்.

'பிதாவே இவர்கள் அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்' என்றது. எதிரியையும் மன்னிக்கும் மனப்பக்குவம். இறையன்பின் வெளிப்பாடு. எமக்காக கிறிஸ்து

## தவக்காலப் பொழிவு

மரணித்த இந்நாளில் மனிதத் திற்கு எதிரான எமது செயற்பாடு களைக் களைந்து இறை விழுமியத்தின் பாதையிலே பயணிப்போம். எமது பாவங்களுக்குப் பரிகாரமாகக் கிறிஸ்துவுடன் இறப்போம். புதிய மானுடமாய் கிறிஸ்துவோடு உயிர்ப்போம்.

எஸ்.யேசுதாஸ்

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

இறைவனை நினைத்து வாழும் வாழ்க்கையே இன்பமானதென நம்முடைய முன்னோர்கள் கூறியுள்ளனர். பலரோடு கூடி வாழ்வு நடத்தும்போது தனிமனித விருப்புகளை நிறைவேற்ற முடியாது போகலாம். எனினும் பிறருக்காக வாழும் நிலை ஒன்றை ஏற்று வாழும் மனப்பக்குவத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் வாழ்க்கை வாழ்வதற்கே என உணர்ந்து கொள்ளலாம். இறையடியார்களுடைய மனப்பக்குவம் இத்தகையதொரு செயற்பாடென்றே கூறலாம். சம்பந்தர் இந்நிலையை "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று பாடியுள்ளார்.

இத்தகையதொரு மனப்பக்குவத்தைப் பெறுவதற்கு ஏற்ற நெறியே பக்தி நெறியாகும். இறைவன் ஒருவனே எமக்கு என்றும் துணையாக இருப்பான் என்ற நம்பிக்கையோடு செயலாற்றும் பயிற்சியே இந்நெறி காட்டும் வாழ்வியலாகும். மெய்யடியார்கள் பலர் இந்நெறிநின்று உலகவாழ்க்கையின் துன்பங்களைத் துரத்தி மற்றவர்கள் வாழ்வு வளம் பெறப் பணிசெய்யும் பக்குவம் பெற்றனர். பெரியபுராணம் இத்தகைய மெய்யடியார்கள் வரலாற்றைத் தொகுத்து வைத்துள்ளது.


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கோவில் வழிபாட்டு நெறியை மனத் தைப் பக்குவப்படுத்தும் பயிற்சிக்கு அடித் தளமாகக் கொள்ளலாம். கோயிலில் பலருங் கூடித் தமது துன்பங்களையும் துயரங்களையும் அல்லல்களையும் இடர்களையும் தீர்க்கும் படி வேண்டுதல் செய்வர். இறைவன் கழலை ஏத்தினால் இடர்கெடும் நண்ணி வணங் கினால் நலம் பெறலாம். வலம் வந்தால் செய்வினை மாயும். எனவே இறைவனடி களை அடைந்தால் உய்வடையலாம் என்ற உறுதிப்பாடும் தோன்றியது.

கோவிலுக்குச் சென்று வழிபடுவதற்கு வாய்ப்பில்லாதவர்கள் அங்குள்ள இறைவனை உள்ளத்திலே நினைந்து கொண்டிருந்தாலே எல்லா வினைகளும் ஓடிவிடுமென இளம் அடியாராகிய ஞானசம்பந்தர் பாடியுள்ளார். கோவிலை வலம் வந்து பாடியாடி இறைவனை வழிபட வேண்டும் என்ற பக்திவாழ்வியலைக்காட்டிய சம்பந்தர் அத்தகைய வழிபாட்டைச் செய்ய முடியாதவர்களுக்கு நினைத்து வழிபட வழிசொல்கிறார். ஒருமுறை இறைவன் கோலத்தைக் கண்டு அதனை மனப்பதிவு செய்துவிட்டால் பின்னர் உள்ளக்கோவிலில் இறைவனை வழிபடப் பயிலவேண்டும். குறிப்பிட்ட கோவிலிலே எழுந்தருளியிருக்கும் இறைவன் கோலத்தை மனத்திரையிலே காணச் செந்தமிழ்ச் சொற்கள் கைகொடுக்கின்றன. ஞான சம்பந்தருடைய நினைத்து வழிபடும் பக்திநெறியைக்கீழ்வரும் பாடல்காட்டுகிறது.

**'துள்ளுமான் மறியங்கை யிலேந்தியூர்**
**கொள்வனாரிடு வெண்டலையிற் பலி**
**கள்வனாருறையுங் கழிப்பாலையை**
**உள்ளுவார் வினையாயின வோயுமே'**





நேற்றைய தினம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட கல்வியியற்றுறை விரிவுரையாளர் எம்.சின்னத்தம்பி அவர்களின் மணி விழாவில் விழாநாயகர் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் விழாவில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் படங்களில் காணலாம்.

## முஸ்லிம் கட்சிகளுடன்...

கூறுகையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நேற்று கட்சி கூடி ஆராய்ந்தது. இக்கூட்டத்தில் முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாடி புதிய உத்திகளை பயன்படுத்துவது குறித்து முடிபெடுத்து இக்கூட்டத்தை இன்றுவரை ஒத்திவைத்தோம். பெரும்பாலும் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு குறித்து ஆராய்ந்து ஒருசில தினங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்போம் இவ்வாறு மாவை சேனாதிராஜா எம்.பி தெரிவித்தார். (ச-2,5)

## இரதோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் சமேத வீர பத்திர சுவாமி ஆலய இரதோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு தேர் பவனியும் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தை சூழவுள்ள வயல்களில் வெள்ளம் உள்ள நிலையிலும் நேற்று மாலை பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி சப்பற பவனி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அம்பாறையில்...

அதிரடிப்படை வீரர் ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன் காயமடைந்தவர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## பேச்சுமூலம் தீர்வு என்று...

பந்தம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் திகதி தற்போதைய ஜனாதிபதியால் ஒருதரப்பாக முறித்துக் கொள்ளப்பட்டது.

ஜனாதிபதியின் இனவாதப் போக்கினை இன்று உலகம் முழுவதும் தெரிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்கு போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று இங்கிலாந்து நாடாளுமன்றத்திலேயே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

போரின் மூலம் இலங்கைத் தமிழர்பிரச்சினைக்கு தீர்வுஇல்லை என்று மற்ற நாடுகளைப்போல் இந்தியஅரசும் கூறியுள்ளது.

இது சரியான நிலைப்பாடு தான் அதேநேரத்தில் இலங்கை அரசின் போர் நடவடிக்கைகளுக்கு உதவுவதுபோல் இந்திய அரசு நடந்து கொள்ளலாமா? என்கிற கேள்வி எழத்தான் செய்கிறது.

சமீபத்தில் இந்தியா வந்த இலங்கையின் இராணுவத்தளபதிக்கு இந்திய அரசின் சார்பில் சிறப்பு வரவேற்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு, பேச்சுவார்த்தை தான் என்று இந்திய அரசு ஒருபக்கத்தில் சொல்லிக் கொண்டே இன்னொரு பக்கத்தில் இலங்கைக்கு போர் பயிற்சி அளிப்பது என்பது முரண்பாடு அல்லவா? என அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

## ரூபவாஹினி கூட்டுத்...

கள் சிலவற்றை வகித்துள்ளார்.

இராணுவத்தினரின் இடமாற்றங்கள் மற்றும் இராணுவத்தில் மீளச் சேர்பவர்கள் குறித்த விடயங்களை கையாளும் பொறுப்பு அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வரும் நிலையில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் இராணுவ ஜெனரல் ஒருவர் ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தை கண்காணிப்பதற்கென நியமிக்கப்பட்டிருப்பது ரூபவாஹினி ஊழியர்களிடையே பெரும் விசனத்தை தோற்றுவித்திருக்கின்றது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள முடிபு செய்திருப்பதாக வெளியாகிய தகவல்களையடுத்து அதன் நடமாடும் ஒளிபரப்பு வாகனத்தையும் அதன் கட்டுப்பாட்டு கருவிகளையும் பாதுகாப்பு அமைச்சு கையேற்றிருப்பதாகவும் ரூபவாஹினி ஊழியர்கள் போராட்டம் மேற்கொள்ளும் பட்சத்தில் இந்த நடமாடும் ஒளிபரப்பு நிலையத்தை வைத்து ரூபவாஹினி ஒளிபரப்பை தொடர்ந்தும் மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

## யாழ்ப்பாணத்தில் நேற்று...

இடி சத்தம், மின்னல் தாக்கம், கன மழை, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு குடியிருப்பாளர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களால் கேட்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாட்டில் பல பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இடம்பெற்ற விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 6பேர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு காரணமாக 91 ஆயிரத்து 194 குடும்பங்களைச் சேர்ந்த 3இலட்சத்து 81ஆயிரத்து 460பேர் இடம் பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் அம்பாறை, பதுளை, மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-2,5)


**மோகன் வீடியோ அன் ஸ்ரூடியோ**

**யாழ் வீதி, மானிப்பாய்.**

இன்று (21.03.2008) வெள்ளிக்கிழமை முதல் இதே பெயருடன் பழைய கட்டடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள புதிய கட்டடத்தில் புதிய தொழில்நுட்பத்துடன் ஆரம்பமாகிறது.

இந்த இடமாற்றத்தை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்,

**எமது சேவைகள்**

❖ வீடியோ படப்பிடிப்பு ❖ கலர்ப் படப்பிடிப்பு
❖ எல்லா வகையான அடையாள அட்டைப் படப்பிடிப்பு
❖ படங்கள் பெரிதாக்கல் (ENLARGEMENT)
❖ டியூரோ பிறேம் செய்தல் ❖ கணனி சார் வேலைகள்
❖ டிஜிட்டல் அல்பம் தயாரித்தல் ❖ திரைப்படப் பிரதிகள் ஒளி நாடாக்கள், CD க்கள் வாடகை.

MOHAN VIDEO & STUDIO
JAFFNA ROAD, MANIPAY.

உங்கள் ஆதரவுக்கு நன்றி

உரிமையாளர்
ப.மோகன்

(953)


## அறிநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இந்து கலாசார திணைக்களத்தின் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இறுதி நிலைப் பரீட்சைக் கருத்தரங்கு இன்று காலை பத்து மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

இந்து கலாசார திணைக்களத்தின் தீவக அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் விரிவுரைகளை ஆசிரியர்களான பி.சந்திரவேல், ந.விஜயசுந்தரம், எஸ். செல்வமனோகரன், மற்றும் ஸ்கந்த சத்தியதாசன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதேவேளை நேற்று நடைபெற்ற பண்ணிசைக் கருத்தரங்கில் கலாநிதி மு.நவரட்ணம் ந.நாகபூஷணி ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர். (ச-5)

## புனர்வாழ்வு நிலையம் படையினரால் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நிலையமொன்றை தெல்லிப்பழையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக பலாலி படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

அப்புனர்வாழ்வு நிலையத்தில் சரணடைந்தவர்களுக்கு எதிர்காலத்துக்கான வழிகாட்டல்களுடன் சமய வழிபாடுகளிலும் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பலாலி படைத்தலைமையகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி புனர்வாழ்வு நிலையத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆட்சியினை தக்க...

கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

2006ஆம் ஆண்டு ஜெனீவாவில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின்போது ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குவோம் என்று அரசாங்கம் சர்வதேசத்தின் முன் உறுதியளித்தது. அவ்வாறு உறுதியளித்த அரசாங்கமே தற்போது பிள்ளையான் போன்ற ஆயுதக் குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. அரசாங்கம் தொடர்ந்து அரசியலில் நிலைத்து நிற்க ஆயுதக்குழுக்களின் உதவிகளை நாடுகின்றது என்றார். (ச-5)

## மட்டக்களப்பு-அம்பாறை...

களிலும் முகாம் அமைத்திருந்த அதிரடிப் படையினர் விலகத் தொடங்கி உள்ளனர்.

திருக்கோவில் அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்றுக் காலை அதிரடிப்படையினர் விலகினர். அதிரடிப்படையினர் விலகிய இடங்களை உடனடியாகவே படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் நிலை கொண்டிருந்த அதிரடிப்படையினர் என்ன காரணத்திற்காக விலக்கப்படுகின்றனர் என்பது குறித்துபாதுகாப்பு அமைச்சு எதனையும் தெரிவிக்கவில்லை.

**பதவிகளிலும் மாற்றம்**

இதனிடையே அதிரடிப்படை தலைமை பதவிகளிலும் திடீர் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. அதிரடிப்படை தலைமைப் பதவியை வகித்த நிமல் லூவ்கே அப்பதவியிலிருந்து அகற்றப்பட்டு அவருக்கு மேற்குப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக இத்தகைய பதவி மாற்றங்கள் நிகழும்போது ஏற்கனவே வகித்த பதவியைக் காட்டிலும் உயர் பதவி ஒன்றே வழங்கப்படுவது வழக்கம். ஆனால் நிமல் லூவ்கேக்கு ஏற்கனவே வகித்த பதவியை விட குறைவான பதவி ஒன்றே தற்போது வழங்கப்பட்டுள்ளது. அதிரடிப்படையின் புதிய தளபதியாக கே.எம்.எல். சரத் சந்திர நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## நோர்வேக் குழு வன்னிக்கு...

இணைத்தலைமை நாடுகள் மற்றும் நோர்வே அனுசரணைப் பணியாளர்கள் வன்னிக்குச் சென்று சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பிப்பது மற்றும் மனித உரிமை விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டக்குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் முகமாகவே வெளிவிவகார அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது.

சர்வதேச பிரதிநிதிகளின் கிளிநொச்சி விஜயத்தை விடுதலைப் புலிகள் தவறாகப் பயன்படுத்துவார்கள் எனவும் இது புலிகளைப் பற்றிய தவறான பிரசாரத்திற்கு வழிவகுக்கும் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருப்பினும் இலங்கையில் சமாதான முயற்சிகளில் முக்கிய பங்காற்றிவரும் இணைத் தலைமை நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியமும் தனது பங்களிப்பினை வழங்கியுள்ளமையானது முக்கியமானது என இலங்கை வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 6 பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்து மனித உரிமைகள் உள்ளிட்ட இலங்கையின் சமகால நிலைவரங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இந்த வாரம் தொடர்ச்சியாக இரண்டு தினங்கள் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் சில நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் கலாசார மற்றும் நலன்புரி நிறுவனங்களின் பெயரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாகவும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக குறித்த நாடுகள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அரசாங்கப் பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த சந்திப்பின்போது நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வினை காணும் பொருட்டு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மேற்கொண்டுவரும் முன்னெடுப்புகள் குறித்தும் மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யும் அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க, இலங்கையில் தாம் அவதானித்தவை குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி இலங்கைக்கானஉதவிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக விரைவில் முக்கிய முடிபுகள் எடுக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழுவினர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் உறுதிமொழி வழங்கியுள்ளனர். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 21.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.